உ

குமரன் துணை.

விவேகபாநு.

[...]ம் 4. | 1905௵ நவம்பர்௴ | புத்தகம் 11.

வித்தை XVI.

[முன் தொடர்ச்சி.]

கிராமபாடசாலைகளுக்கு உபாத்தியாயர்களைப் பயிற்றவேண்டியமுறைகளைப்பற்றிச் சென்றசஞ்சிகையிற் கூறினோம். கிராமபாடசாலைகளை அபிவிருத்தி பண்ணினாலன்றி பிரதமகல்வி யபிவிருத்தியடையாது. கவரன்மெண்டார் அதைச்சீர்ப்படுத்துவதில்தக்கவழி வகைகளை அனுசரிக்க வில்லை யென்பது நம்கருத்து. சென்ற ஆண்டில் பல சப்அஸிஸ்டெண் இன்ஸ்பெக்டர்களை நியமனஞ் செய்தார்கள். கிராமபாடசாலைகளுக்குக் கட்டிடங்கள் பலஇடங்களில் ஏற்பாடுசெய்ய முயல்கிறார்கள். இவைபோன்ற விஷயங்களை இன்னும் எவ்வளவு செய்தபோதிலும் கல்வியபிவிருத்தி நினைத்த வண்ணம் சீக்கிரம் முடியப்போகிறதில்லை. பிரதமகல்வி யபிவிருத்திச்செய்யத் தக்கவர் சூபர்வைஸர்களே ஒழிய சப்அஸிஸ்டெண்டுகள் ஆகமாட்டார்கள். இத்விஷயம் முன்னரே ஒரு சஞ்சிகையில் சுட்டிக்காட்டியிருக்கிறோம். ஒவ்வொரு சூபர்வைஸருக்கும் தற்காலம் ஒரு தாலூகா இருக்கிறது. ஒவ்வொரு தாலூகாவிலும் சற்றேறக்குறைய நூறு பாடசாலைகளிருக்கின்றன. எழுபத்தைந்து என்று வைத்துக்கொண்டாலும் அதிகமே. ஒரு சூபர்வைஸர் இத்தனை பாடசாலைகளையும் எப்படிப்பார்க்க முடியும். ஒரு பாடசாலையை வருஷத்தில் மூன்றுமுறையே பார்க்கமுடியும். ஆடியில் ஒருமுறை ஆவணியில் ஒருமுறைபார்த்தால் பாடசாலை எவ்வாறு விருத்தியடையும். ஆகையால் ஒவ்வொரு சூபர்வைஸருக்கும் ரிவினியூ

இலாகா ரிவினியூ இன்ஸ்பெக்டர்களுக்குச் சராசரி 25 அல்லது 20 கிராமங்களிலிருப்பதுபோல் 25 கிராமங்களுக்கு அதிகமிருத்தல் கூடாது. ஒரு பாடசாலையை மாதம் ஒருமுறையாவது மேற்பார்க்
து வரவேண்டியது இன்றியமையாதது. அந்தச் சூபர்வைஸர்க
குத்தக்க போதனைகள் அப்போதைக்கப்போது சப் அஸிஸ்டெ
களும் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர்களும் கொடுக்கவேண்டு
மல் பாடசாலையில் நுழைந்து பழகிவந்துவிட்டார்கள் என்று
தல் போதாது. விளக்குக்கு நிறையத் திரியிட்டு எண்ணெ
திருந்தாலும் அடிக்கடி தூண்டுதலும் இன்றியமையா
அவ்வாறே அறிவு என்னும்ஜோதி கொழுந்துவிட்டெரிய
குத் தூண்டுதலிருக்கவேண்டும். தற்காலம் வித்தியா
துவரும் முறைகளைக்கவனித்தால் சூபர்வைஸர்களில் சிலர் ம
லாக அநேகர் காலங்கழித்துச் சம்பளம் பெறுகிறார்களே ஒழிய கிராமக்கல்வியை அபிவிருத்தி பண்ணிவருவதாகத் தோற்றவில்லை. சொற்பசம்பளத்தில் வண்டிமாடுவைத்துக்கொண்டு நெடுந்தூரம் பிரயாணம்செய்து வேலைபார்ப்பதென்றால் முடியாதவிஷயமே. நாம் சொல்லுகிறபிரகாரம் 25 கிராமங்களிருந்தால் சுற்றுப்பிரயாண நிர்ப்பந்தம் அதிகமில்லை. அதனால் வீணாகிறகாலம் கல்வியபிவிருத்தியில் செலவழிக்கப்படலாம். இதுநிற்க. அவர்களுக்குக்கல்வி யபிவிருத்திக்கேற்ற சாதனங்களை வித்தியா இலாகாதார் கொடுத்துதவுவதுமில்லை. ஜில்லாபோர்டாரோ இதுவிஷயம் தூங்குகிறதூக்கம் சொல்லிமுடியாது. நம் ஜில்லாபோர்டுகளில்மட்டும் தக்க கல்வி ஊக்கமுள்ள இரண்டொரு மெம்பர்களிருந்தால் நம் கிராமபாடசாலைகள் எவ்வளவோ அபிவிருத்தியடையும். அவர்களில் அநேகருக்கு வித்தியாமுறையே இன்னதென்பது தெரியாது. தெரிந்த இரண்டொருவர் சிறிதும் சிரத்தை எடுத்துக்கொள்வதில்லை. இது வரை எந்த ஜில்லாபோர்டு மெம்பராவது கிராமங்களைச் சுற்றிப்பார்த்துக் கிராமக்கல்வியின் நிலைமை இவ்வாறு இருந்துவருகிறதென்றும் அதனை இவ்வாறு விருத்திசெய்யவேண்டுமென்றும் எழுதி வித்தியா இலாகாதாருக்காவது பிரஸிடெண்டுக்காவது கவரன்மெண்டுக்காவது ஒரு நிருபம் எழுதியதுண்டா? கல்வியபிவிருத்தி யில்லாவிடில் கிராம சீர்திருத்தங்கள் எவ்வாறுமுடியும்? வித்தியா இலாகாதார்

தம் கடமையாகச்செய்யப்பட்ட விஷயங்களை இவர்கள் தலையாட்டிக ளாயிருந்து சரிசரியென்று சொல்லிவருகின்றார்களே ஒழிய அது விஷயத்தில் சிரத்தையெடுத்துக்கொண்டு பட்ஜெட் நிலைவரம் ஏற்படு த்துங்காலத்தில் இன்னஇடங்களுக்குப் பாடசாலைகள்தேவை, இன்ன இடங்களில் பாடசாலைகள் அநாவசியம், இன்னபாடசாலைகளுக்குப் படங்கள் முதலிய சாதனங்கள் போதாவென்றுபேசிய மெம்பர்களை நாம்பார்த்தும் அறியோம், கேட்டுமறியோம். கல்வியபிவிருத்திக் கென்று உழைப்பவர் சிலர் இருக்கவேண்டியது இன்றியமையா தது. அதையே முக்கியமாகவும் தம் ஆயுள்வேலையாகவும் வைத் துக்கொண்டு உழைத்தாலொழிய கிராமபாடசாலைகளை ஜில்லாப்போ ர்டு மெம்பர்கள் விருத்திசெய்யப்போகிறதில்லை.

சூபர்வைஸர்களுக்குச் சொற்பபாடசாலைகளின் மேற்பார்வை யை ஏற்படுத்துவதுடன் கல்வியபிவிருத்திக்குரிய தக்கசாதனங்களை யும் அவர்களுக்குத் தேடிக்கொடுக்கவேண்டும். மராமத்து இலாகா தாருக்கு பெரும்பணச்செலவில் ஆயுதங்களை வாங்கிக்கொடுக்கும் கவரன்மெண்டார் வித்தியா இலாகா வேலைக்காரர்களுக்குத்தக்க கரு விகள் வாங்கிக்கொடாததென்னோ? ஒவ்வொரு சூபர்வைஸருக்கும் பொருட்பாடங்களுக்கு உபயோகப்படும் பொம்மைகளும், படங்களு ம் கொடுபடவேண்டும். ஒரு விநோதகாட்சிக்கண்ணாடி கொடுக்க வேண்டும். அதில்வைத்துக்காட்டும்பல அறிவூட்டத்தக்க படங் கள் கொடுக்கவேண்டும். அவர்கள் வரவைக்கிராமத்தார் ஆவலு டன் எதிர்பார்க்கும்படியாகச் செய்யவேண்டும். தக்க சாதனங்கள் மட்டும் இருந்து தக்கபடி உழைத்தால் கிராம பாடசாலைகள் மட்டு மோ கிராமக்குடிகளை கல்வியடையும்படி செய்யலாமே. சுகாதார விஷயமாகவும் கிருஷிசம்பந்தமாகவும் எத்தனையோவிதங்களாய் அறி வைப் பரவச் செய்யலாமே. கிராமத்தார் கண்களை மட்டும்திறந்து விட்டால் தேசமுழுதும் செழித்தோங்குமே. அவர்கள் அந்தகாரத் தாலன்றோ தேசம் அபிவிருத்தியடையத் தடையாயிருக்கிறது. இது விஷயத்தில் நாமேஉழைத்தாலல்லது கவரன்மெண்டாரையும் ஜில்லா போர்டாரையும் எதிர்பார்ப்பது போதாது. நூற்றுக்கு 93பேர் அந் தகாரத்தில் அழுந்தியிருக்கிறார்களே. கல்வியபிவிருத்தியானது எழுதப்படிக்கக் கற்றுக்கொள்வதில் மட்டும் அடங்கும் என்று பலர்

நினைக்கிறார்கள், அது சரியன்று. மனோவிலாசம் அடையவேண்டுவது முக்கியமே ஒழிய எழுதப்படிக்கக் கற்றுக்கொள்வதால் மட்டும் பயனில்லை. உதாரணமாக நம் தாய்மார்களும் பாட்டிமார்களும் பாடசாலை சென்று எழுதப்படிக்கக் கற்றுக் கொள்ளாவிடினும் மனோவிசால மடைந்தவர்களாய் குடும்பகாரியங்களைச் சரிவர நடத்துவதில் சாமர்த்தியம்பெற்று இருந்தார்கள். நம்பெண்கள் பாடசாலைகளிற்சென்று எழுதப்படிக்கக் கற்றுக்கொண்டும் குடும்ப காரியங்களைச்சரிவர நடத்தத்தெரியாமல் அனர்த்தம் விளைவிக்கிறார்கள். ஒரு நல்லயோசனை சொல்லத்தெரிகிறதில்லை. சதியாலோசனைக்கோ கணக்கில்லை. கிருககிருத்தியங்களைச் சரிவர நடத்துவதிலும் குழந்தைகளை வளர்ப்பதிலும் உற்றார் பெற்றோரை உபசரிப்பதிலும் அதிகாரஞ் செய்வதிலும் பக்தி விசுவாசத்தைக் குழந்தைகளுக்குப் புகட்டுவதிலும் ஆபத்துக்காலத்தில் அருமையான யோசனைகள் சொல்வதிலும் பாடசாலை செல்லாத நம் தாய்மார்களும் பாட்டிமார்களும் எவ்வளவோ மேன்மை பெற்றிருந்தார்கள். அவர்களுக்குத் தெரிந்த புராண கதைகளும் நீதிமொழிகளும் யுக்தி புத்திகளும் சர்வகலாசாலைபோய்ப் பயின்ற ஆடவனுக்குந் தெரியாது. அவர்களுக்குத் தெரிந்த குடும்ப வைத்தியம், வைத்திய சாஸ்திரம் கற்று வைத்தியத் தொழில் கைக்கொண்டவர்களுக்குந் தெரியாதெனலாமே. ஒழிவான நேரங்களிலெல்லாம் சன்மார்கப் பாட்டுக்களைப் பயில்வதும், சத்கதைகளைக் கேட்பதும் சத்விஷயங்களிலே கண்ணுங் கருத்து மாயிருந்து புருஷ பக்தி, தெய்வபக்தி முதலிய மேலான குணங்களை யபிவிருத்தி பண்ணிக்கொண்டு குடும்ப விஷயங்களைச் செட்டுங் கட்டுமாகவும் சீராகவும் நடத்துவதுமாயிருந்தார்கள். தற்காலப் பெண்களோ இவைகளுக்கு முற்றிலும் மாறாக நடந்து வருகிறார்கள். நம் பெண்கள் படிப்பதே அவர்களுக்குப் பொழுது போக்கு. பூப்போடுகிறதே அவர்களுக்கு விநோதம். தேக சிரமப்பட்டு கிருக கிருத்தியங்களைத் தாங்கள் செய்யாமல் வேலைக்காரர்களைக் கொண்டு சகல காரியங்களையும் நடத்திக் கொண்டு தங்களை அலங்கரிப்பதிலேயே பொழுது போக்குகிறார்கள். சொற்ப துன்பத்தையும் சகிக்க இவர்களால் ஆகாது. சிறு வியாதிகளுக்கும் வைத்தியரைக் கூப்பிடச்செய்வார்கள். இவைகளுக்கெல்லாம்

காரணமென்ன? நம் கவலைக் குறைவே முக்கிய காரணம். மனோ விசாலமான படிப்பைக் கொடுத்துவந்த நாம் அந்நியர் வசப்பட்டு அவர்கள் மார்க்கங்களையே பின்பற்றலானோம். நம் நன்முறைகளைக் கைவிட்டோம். நம் புராணங்களையும் இதிகாசங்களையும் அடிக்கடி வாசித்துக் கேள்வியாகிற செவிச்செல்வத்தால் சகலஜனங்களுக்கும் அறிவூட்டி வந்தோம். அதை வர வர நிறுத்தத் தலைப்பட்டோம். மதாசாரங்களிலும் பக்தி மார்க்கத்திலும் அசிரத்தை காட்ட ஆரம்பித்தோம். அதனால் நம் சுவதர்மங்களை வர வர இழந்தோம். அந்நிய நாட்டாரைப் பார்த்து ஆசையை அபிவிருத்தி பண்ண ஆரம்பித்தோம். அதனால் சத்தியமார்க்கங்களினின்றும் விலகிச் செல்ல ஆரம்பித்தோம். அதனால் நாம் சீர்குலைந்தோம். ஆகையால் நம் தேச க்ஷேமத்தில் விருப்பமுடைய எவரும் நம் தேச அறிவு அபிவிருத்தி விஷயத்தில் கண்ணுங்கருத்துமாயிருந்து வரவேண்டும். அறிவுடையாரே எல்லா முடையார். எழுதப்படிக்கு மறிவை மாத்திரம் அறிவாகக் கருதாமல் மனோவிசாலத்தை உண்டு பண்ணத்தக்க எல்லாச் சாதனங்களையும் கைக்கொண்டு கண்ணால்பார்ப்பதாலும் காதால் கேட்பதாலும் அறிவைப் பெறச்செய்து நாட்டின் நன்மையை அபிவிருத்திபண்ணக் கடமைப் பட்டவர்களாவோம். கல்விமான்கள் எல்லோருடைய கடமையும் இதுவே. இஃதொன்றுமே நம் தேசத்தை முன்னுக்குக் கொண்டுவருமே ஒழிய வேறு எதுவும் கொண்டுவரமுடியாது. நாம் முன் மேன்மை யடைந்திருந்தது நம் அறிவாலேயே. ஜப்பானியர் தற்காலம் உயர்ந்த பதவியிலிருப்பதும் அறிவின் அபிவிருத்தியாலேயே. அறிவும் ஒழுக்கமுமே இகலோக அபிவிருத்திக்கும் பரலோக சித்திக்கும் மூலகாரணமாம். அவைகளை நம் நாட்டு வழிகளை யனுசரித்து அபிவிருத்தி பண்ணுதலே ஒவ்வொருபுத்திமானின் கடமையாம். "கைப்பொருடன்னின் மெய்ப்பொருள் கல்வி" என்பதை ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிமிஷமும் சிந்தித்தொழுகுதல் மேலாம்.

பத்திராதிபர்.

சிருஷ்டியின் அற்புதங்கள்.

வெளிச்சந்தரும் ஜந்துக்கள்.

முன்சஞ்சிகையில் சிறிய பூச்சிகள் மின்னி வெளிச்சந் தருவதைப் பற்றிச் சொன்னோம். இச்சமயம் வெளிச்சங்காட்டும் சில பிராணிகளைப்பற்றிப் பேசுவோம். இவை மின்மினியைப்போலவே ஒளி வீசும். இவ்விதப் பிராணிகள் சமுத்திரத்தில் திரளாய்க் கிடைக்கும். சில வேளைகளில் அவைகளைக் கண்ணுற்றால் தீப்பற்றி எரிகிறது போல் தோன்றும். ஒரு கப்பல் சமுத்திரத்தில் ஓடுமானால் அதன் இருபக்கங்களிலுமிருந்து நெருப்புக் கொட்டுகிறது போலவும் பின்புறம் பார்க்கும்போது மின்னல் கொடி போன்ற அந்தத் தண்ணீர் பிளவுபட்டுச் சோபிக்கிறது போலவும் தெரியும். பெரிதும் சிறிதுமான எண்ணிறந்த வெளிச்சங்காட்டும் ஜீவராசிகள் சமுத்திரத்திலிருப்பதினாலே இவ்விதமுண்டாகிறது என்பதற்குத் தடையில்லை. மின்னல் மின்னுவது போலச் சிலபிராணிகள் வெகு விரைவாய் விட்டு விட்டு மின்னும். இச்சிறு ஜந்துக்களுக்கெல்லாம் தங்களுக்கு இஷ்டமானபோது வெளிச்சங் கொடுக்கும் தத்துவமுண்டு. அவைகள் அசையும்பொழுது மாத்திரம் வெளிச்சங் கொடுக்குமே தவிர மற்றப்படி அசையாமலிருக்கும்பொழுது வெளிச்சங்கொடா. வெளிச்சந்தரும் நிணைக்கினி என்னும் ஓர் வகை வஸ்து அவற்றின் எலும்புகளிலிருந்து எடுக்கப்படுகின்றது. இருட்டிலும் அது பிரகாசிக்கும். அப்படிப்பட்ட வஸ்து அச்செந்துக்களிட மிருப்பதினாலேயே வெளிச்சம் கொடுக்கிறதாகச் சிலர் நினைக்கிறார்கள். வெளிச்சங்கொடுக்கும் பிராணிகளில் சிலசக்கரமாகவும் முட்டை வடிவமாகவும் வேறு சில சலங்கை முதலிய பற்பல விதமாகவும் உருப்பெற்று வாழ்கின்றன. அவைகள் எல்லாவற்றிலும் பிரமிக்கத்தக்கது பிரோசோமா என்ற பெயரையுடைய பிராணி. அப்பிராணி இரண்டு அல்லது மூன்றடி நீளத்தில் சிறு சிறு ஜந்துக்கள் ஒன்றோடொன்று நெருக்கமாய்க்கூடி ஏற்பட்டிருக்கும் ஒரு வகைக்குழாய் போன்ற வஸ்துவாம். வெளியிலுள்ள தண்ணீரைக் குழாயின் ஒரு பக்

கமாய் உள்ளுக்கு வாங்கி மூடியிருக்கும் மறுபக்கமாய் அந்தத் தண்ணீரை வெளியில் மெதுவாய்க் கசியவிடும் இயற்கை அதற்கு உண்டு. இது நிற்க.

மேடுசா அல்லது ஜெல்லிமீன் அதிசயிக்கத்தக்கது. தலையில்லாப்பிராணிகளைச் சேர்ந்த இனத்தில் இதுவும் ஒன்றாம். இது சமுத்திரத்தில் நீந்தும்போது பார்த்தால் காளான் மிதப்பதுபோல்காணும். மேல்வட்டத்தின் அடியிலிருக்கும் வாய்க்கும் அதன் இரைப்பைக்கும் ஒரே திறப்பு உண்டு. இந்த இனத்தைச் சேர்ந்த மீன்களுக்கு இருட்டில் பிரகாசந் தரும் தன்மை இருக்கும். தேள் போல மிகவும் கடுமையாய்க் கொட்டும் சுபாவம் இதற்கிருப்பதால் கடலில் குளிப்பவர்கள் இதற்கு மிகவும் பயப்படுவார்கள். கடலில் உள்ள சிறு பிராணிகளைத் தின்று இவை ஜீவிக்கும். இவைகளை மற்ற செந்துக்களும் தின்று ஜீவிக்கும். பத்துப் பன்னிரண்டு ராத்தல் கனமுள்ள ஒரு மீனைப்பிடித்து உலர வைத்தால் ஒரு ரூபா எடைக்குங் குறைவாக விருக்குமாம். இரதியின் அரைக்கச்சு என்று சொல்லப்பட்ட மற்றொரு செந்து உண்டு. இது நாடாவைப் போன்ற உரு அமைந்த ஒரு ஜந்து. அழகான வர்ணங்கள் கூடின அந்த நாடாவின் ஓரங்கள் கண் மயிர் அருகிட்டுத் தொங்குவது போலத் தொங்கிக் கொண்டிருக்கும். நீளத்தில் ஐந்து அல்லது ஆறு அடி வரையில் வளரும். அவைகளில் ஏராளமானவை இரவில் பிரகாசத்தைக் கொடுத்துத் தண்ணீரில் தாராளமாய் நீந்திப்போகும் சுபாவம் உள்ளன.

எஸ். சாமிநாதையர்.

488

விவேகக்கொத்து.

உலக வாழ்க்கை அன்புள்ளவனுக்கே இன்பந்தரும். அது இல்லாதவனுக்குத் துன்பந்தருகின்றது.

அன்பில்லாதவன் அறிவையடைதல் கூடுமாயினும் ஞானத்தையடைதல் சிறிதும் இயலாது.

விவேகிகள் தமது விவேகத்தால் காக்கப்படுகிறார்கள். அவிவேகிகளோ தமது அவிவேகத்தால் நாசம் அடைகின்றார்கள்.

பழக்கமே எல்லாவற்றினும் சிறந்தது. பழகிய வழியையே மனம் பற்றுகின்றது. இவ்வுலகத்தை யெல்லாம் ஆள்வதும்அதுவே. பழக்கத்திற் சிறந்தது எதுவுமில்லை. மோட்சம் தருவதும், நரகந் தருவதும் அது தான். ஆதலின் எப்பழக்கமும் தொடக்கத்திலேயே நன்றாகக் கவனித்துக் கொள்ளவேண்டும்.

காரணமுங்காரியமும், சாதனமுஞ்சாத்தியமும், வித்தும் பலமும் பிரிக்கக்கூடாதனவாம். எனெனில் காரியம் காரணத்திலும், சாத்தியம் சாதனத்திலும், பலம் வித்திலும் அடங்கியிருக்கின்றன.

தன் மனமே தனக்குச் சாக்ஷியாக வைத்து நடந்தால் யாதொரு தீமையும் வராது. அது மட்டுமோ எல்லா நன்மையும் கைகூடும்.

புகை நுழையாத இடத்திலும் போதனை நுழைந்து விடுகின்றது. கைகேசியின் மனவலிமை கூனி போதனையால் சிதறிப் போயிற்று "கரைப்பார்கரைத்தால் கல்லுங்கரையும்".

புண்ணியம் செய்வதைப் போல் சுலபமான காரியம் எதுவுமில்லை. புண்ணியம் இன்னதென்று அறிந்தால் போதும். பிறருக்குத் துன்பம் செய்யாதிருப்பதே மேலான தருமம்.

நம்மிடத்தில் பிறர் எவ்வாறு நடந்துகொள்ள விரும்புகின்றோமோ அவ்வாறே நாம் பிறரிடத்து நடந்துவரவேண்டும்.

பத்திராதிபர்.

உ

சிவமயம்.

சிவகாசித் திருமஞ்சனக்கிணற்று விநாயகர் இரட்டைமணிமாலை.

காப்பு.

மிக்கசிவ காசி விசுவேசர் மெய்தோயத்
தக்க திருமஞ் சனக்கிணற்றிற்—புக்க
இபமுகத்தே வுக்கோ ரிரட்டைமணி மாலை
சுபமுறச்சொ லஃதே துணை.

நூல்.

பூமிசையோ கம்பெற்ற புங்கவனைப் போலிந்தப்
பூமிசையோ கம்பெறலாம் போற்றுவீர்—மீமிசையுங்
காக்குஞ் சரணமெதிர் காட்டுசிவ காசிநீங்
காக்குஞ் சரத்தின் கழல். (1)

கழலிரண் டோடொரு கொம்புடைத் தாய்ச்சிவ காசியினு
முழலுமென் னெஞ்சினு நீங்கா திருந்துள் ளூலாவிவரு
மழமத யானை*யென் பாமாலை கொண்டு வனைந்தருளும்
பழகு மிதைப்பெற்ற †வானைக்கு மிக்குணம் பண்டையதே. (2)

பண்டு பலபசுவைப் பாசத்தாற் பந்தித்து
மண்டுபுவி யெங்கும் வரவிடுத்தா—யண்டுமஃ
தற்றூற் சிவகாசி யைங்கரநின் பாலடையு
மற்றூ ரறுக்கவல்ல வர். (3)

வல்லவை மாது மணாளா பலகலை வாணர்பயி
னல்லவை மேய சிவகாசி வைகுநின் னன்குயர்சீர்
சொல்லவை யினனரு ளாணவ மாயைத் தொடர்பதனு
லல்லவை யேசெய் துழல்வே னினைவந் தடைவதற்கே. (4)

அடைவித்த காய மனந்தமைமங்கைக் கங்கைச்
சடைவித்த காயமனந் தம்மைப்—புடைவித்துப்
புண்பாடு செய்ததினிப் போதுஞ் சிவகாசிக்
கண்பா டுவநினையே காண். (5)

---

* என்பாமாலை - எலும்பாகிய மாலையென்பது சிலேடைவகையாற் காண்க.

† ஆனை - இடபவாகனத்தையுடைய கடவுள்.

காண்பன யாவையு நீயே யெனி லுனைக் கண்டுமகிழ்
பூண்டவர் யார்நின்னில் வேறே வவரிப் பொருள்புகலாய்
மாண்பமை யுஞ்சிவ காசியி லன்பரை வாழ்வித்தருள்
பூண்பயி லோர்கொம்பு மாதங்க மாமுகப் புங்கவனே. (6)

புங்கவரைக் காக்கும் பொருட்டுவிடப் போனகமுண்
டங்கவரைக் கார்முகத்தார் தம்மகவா—மைங்கரனை
மாண்பார் சிவகாசி மாநகரில் வாழ்த்துநரே
காண்பார் சிவமாங் கதி. (7)

கதிதரு மந்திபண் பாடும் பொழிற்சிவ காசியினு
மதிதரு மந்திக முள்ளத்து மெய்யடி யாரிடத்தும்
வதிதரு மந்தி நிறச்சடை யார்பெற்ற மாகளிறு
பதிதரு மந்திலின் வந்துதன் மேற் கவிபாடிடினே. (8)

மேலைக்கு வித்தாய் வினையும் வினையறுநின்
காலைக் குவித்தார்நேர் கைதொழினுஞ்—சோலைக்குட்
சிதங் கமுகமிசைச் சேர்சிவகா சிக்கணுயர்
மாதங் கமுகமிசை மன். (9)

மன்பதை யாய வருண்மத னேவு மலர்க்கணைக
ளென்பதை யாமலிருப்பதுண் டேனினை யேத்திடுமெய்
யன்பதை யார்மறப் பார்சிவ காசியு ளைங்கரனே
பின்பதை யாமலிருப்பதற் கேனும் பெரிதருளே. (10)

பெரிதாம் பிரபலஞ்சேர் பிஞ்ஞகனைச் சூழ்ந்தெற்
*குரிதாம் பிரபலமென் றேதுங்—கரிதா
னகராக மேவி யரவார ஞ்சி
நகராக மேவியது நன்கு. (11)

நன்காங் தமிழ்ச்சிவ காசியில் வல்லவை நங்கையங்கை
யின்காந்த ளால்வரு டப்பெறும் பாத மிரண்டுமென்முன்
வன்காந்த மாய்வரி லென்னெஞ் சிரும்பு வசப்படுமாற்
பொன்காந்த ஞதியர் போற்றத் தகும்பரி பூரணனே. (12)

பூரணமா மெங்குநிறை போர்க்களிறே பூங்காவிற்
காரணவுஞ் செய்யசிவ காசியினற்—சீரண்
டிருமஞ் சனக்கிணற்றிற் சேர்ந்திருந்த சீர்நின்
கருமஞ் சனங்கட்குக் காட்டு. (13)

* உரிது - உரியதென்பதன் விகாரம். அம்பிகாபதிகோவையி லுதார ணங்காணலாம்.

காட்டுவித் தாலன்றிக் காணே னினைச்சிவ காசியினில்
வீட்டுவித் தாய விநாயகனே யென்று மெய்த்தொண்டர்தாஞ்
சூட்டு†வித் தாம மெனவடி யேனன்பிற் சொன்னசிறு
பாட்டுவித் தாரமின் றேனுங்கைக் கொண்டருள் பண்ணுகவே.

பண்ணிய வர்க்கம் படைத்துப் பதம்பரவி
யண்ணிபவர்க் கன்றேமெய் யன்புகொண்டுள்—ளெண்ணியவை
கைகூட்டு மைங்கைக் களிறுசிவ காசியினில்
‡வைகூட்டுன் பந்தவிர வந்து. (15)

வந்திக்கும் வேத முடிவிற் பிரணவ மந்திரத்தின்
முந்திக் குறிக்கத் தகுஞ்சிவ காசிமுதற் பொருளாந்
தந்திக்கு விண்ணப்ப மொன்று திருமஞ் சனக்கிணற்றி
னந்திக்கு நோக்கி யடிபணிந் தேசொல்வமன்பினெஞ்சே. ()

அன்பே சிவமென் றரவார ஞ்சியி லுன்
முன்பேசி வந்தனஞ்செய் மூதறிஞர்—பின்பே
திரிந்தமல ராவஞ் செழுந்துதிக்கைத் தேவே
விரிந்தமலர் நாடளிபோல் வீழ்ந்து. (17)

வீழ்வண்டர் பாண்செய் மலர்கொய்தர்ச் சித்து விநாயகனைச்
சூழ்வண் டமிழிற் றுதிசிவ காசி தொழார்கிகருந்
தாழ்வண் டமியன் சிவஞானச் செல்வந் தழையும்பெரு
வாழ்வண் டவைக்கு மினிமே லவன்செம் மலரடியே. (18)

மலவா தனையகற்றும் வாராய்நீ வஞ்சங்
கலவா தனையசிவ காசித்—தலமதிலோ
ரற்புதம்பா சத்தோடே யங்குசங்கொண் டானையென்று
பற்பலர்காண் பானிருத்தல் பார். (19)

பாராற் றுறுமிலை நேரன்னை மார்வயிற் பட்டினமும்
பேராற்று நுண்மணல் போலெண்ணி லாச்சன்மம் பெற்றுழல்வீ
ராராற் றுயர்தவிர்ப் பீர்சிவ காசி யடைந்துயலாம்
போராற்று மாமருப் பேந்திதன் பூங்கழல் போற்றுமினே. (20)

சிவகாசித் திருமஞ்சனக்கிணற்று விநாயகர்

இரட்டைமணிமாலை முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

---

† உவி - தலை.

‡ வைகூட்டுன்பம் - தங்கிய ஊழால் வருந்துக்கம்.

492

உ

சிவமயம்.

சிவகாசி விசாலாக்ஷியம்மை

மும்மணிக்கோவை.

காப்பு.

இம்மணிக்கோ வையமுதோ வென்னவுமை யென்றாய்மேன்
மும்மணிக்கோ வைநூன் மொழிவிக்குஞ்—செம்மணிக்கோ
வையார் சிவகாசி மாதங்க மாமுகத்தோர்
கையார் சிவந்த கழல்.

நூல்.

பூமன் றடங்கணிதம் போய்ப்படிந்து பொற்கொன்றைத்
தாமன் *றடங்கணிதன் றாண்மலர்பொன் மாமன்று
சென்றுநின்ற தென்று சிவகாசி சேர்ந்திறைஞ்சி
லென்று நின்ற றேடிருப்பல் யான்.

யானென தென்னுஞ் செருக்கறுப் பாரவர் யாரெனுநீ
தானென லாயிரண் டற்றிருப் பாரந்தத் தன்மையெனக்
கேனென லேயரு ளாய்சிவ காசி யிறையவர்தம்
பானென லங்கையி லேற்றறஞ் செய்தருள் பார்வதியே. (2)

பார்முத லாவெண் ணார்முப் பதிற்றோ
ரஞ்சுதத் துவத்தின் மிஞ்சுதத் துவமாம்
பொருளா யன்பர்க் கருளாய் நிறைபரி
பூரண னகில காரண னூழிதோ
றோங்கு மலையான் யாங்கு மலையான்
கண்ணுதற் பரமன்யா னெண்ணுதற் பரமன்
தொடுக்குமா சடையா னடுக்குமா சடையா
னருவரை வில்லான் றிருவரை வில்லான்
வேத வாசியான் போத வாசியா
னக்கர மைந்தான் செக்கர மைந்தான்
மாதரைத் தேரா னூதரைத் தேரா
னக்கடுக் கையா னக்கடுக் கையான்
காசியி னிச்சிவ காசி யுயர்வென்

* தடங்கணி—விசாலாக்ஷி.

றங்கு நின்று மிங்குவங் தமரு
நேச மிகுவிசு வேச னெருபா
லகலா திருந்து புகலா மெனவென்
போன்ரு ரேனுந் தேன்ரும் மலராற்
பூசை புரிந்துள் ளாசை விரிந்து
கரந்தலை முகிழ்ப்ப வரந்தரு கெனநீர்
நேத்திர மல்கத் தோத்திரம் புகன்றுள்
ளிளக மெய்ம்மயிர் புளக மரும்பநேர்
நின்றன ராயி னன்றருள் சுரந்தே
யிகபர சாதன சுகபர மாகிய
செல்வப் பொருளுங் கல்விப் பொருளு
ஞானமு முயர்ந்த தானமற் றெவையு
மெளிதி னருளுங் களிமகிழ் சிறக்குஞ்
சாந்த பார்குழற் பூந்தடங் கணியே. (3)

கண்பாரா யாவென்று கண்டுசிவ காசியிலுன்
பண்பாரா யாவென்றுன் பந்தவிர—விண்பார்
தருந்தடங்க ணித்தாய்நிற் சாருமென் றன்னு
ளிருந்தடங்க ணித்தாயி னேன். (4)

இன்னந் தனிக ரிடஞ்சென் றியாசிக்கு மித்துயரந்
தன்னந் தனியனெவ் வாறே சகிப்பன் றடங்கணியே
வன்னந் தனிதம் பணிசிவ காசி வரதருக்கு
முன்னந் தனிகரின் மாமனை யாய முதற்பொருளே. (5)

பொருநையும் வையையும் போந்தா டினர்தங்
கருநையு மாறு கதியு முதவும்
பல்வளஞ் செறிந்த பாண்டி நாட்டில்
வில்வ வனமென மேனு ளிருந்து
நல்வழி காட்டு *ஞான முனிக்காச்
செல்வமுங் கல்வியுந் திகழ்சிவ காசி
யாய நன்னகரி லரும்பெற லமுதெனத்
தூய நீர்நிறை தொல்சிவ கங்கைத்

* ஞானமுனி பராக்கிரம முனிவர் சிவகாசிப் புராணத்துட் காண்க.

தீர்த்த மொன் றுண்டது தெரிந்து கண்ணுற்
பார்த்தவர் கேட்டவர் படிந்தவர் நினைத்தவ
ரெண்ணிய வெண்ணியாங் செய்த வுளத்திற்
கண்ணி யதன்மேற் கரையின் பாங்கர்ப்
பூருவ முகமாப் புக்கெழுந் தருளித்
தனக்கு வலப்பாற் றன்னை மணந்துநன்
மனக்கு மகிழ்செய் மணாள ராகி
யமர்விசு வேசரை யகலா தென்று
மெமர்கள் பாட லென்ன வேனுங்
குற்றஞ் சிறிதுங் குறிக்கொ ளாதுதான்
பெற்ற மகாரின் பிதற்றுரை போல
வேற்றருச் சனையே யிஃதா மென்று
தேற்ற மிக்க திருவுளங் கொண்டு
பிறவிப் பிணியைப் போருண் மருந்தா
லறவப் பொழுதே யகற்றியா னந்த
வெள்ளத் தழுந்த விட்டு விட்டே
யுள்ளக் களிகூ ரொருத்தி யுலகெலா
மண்டு சராசர மனைத்து மோர்கருக்
கொண்டு தன்வயிற் குலாவ வைத்துப்
பெறாது பெறீஇப்பல பேத மிங்ங
னுறாது வைத்த வருட் பெருந்தாயே. (6)

தாய்க்குமுத வாச்சிதடர் தம்மிடத்திற் சாராமற்
சேய்க்குமுத வாய்ச்சிவையே சிற்பரையே—வாய்க்கு
மருமருந்தே யெங்கட் கரவார ணாசி
தருமருந்தே னேசெய் தயை. (7)

தயவரும் பாம லரவார ணாசி தனிலிருந்தாற்
கயவரும் பாமலர் சாத்தின ரேனுங் கனிந்தருளு
நயவரும் பாமன் முலைத்தடங் கண்ணிநின் னல்லருளா
லுயவரும் பாமர னென்செய்கு வேன்சற் றுரைத்தருளே.

அருக்கன் புவியிரு ளகற்றுமா போல
வுருக்கொண் டுவந்திவ் வுலகி லெல்லா
வுயிர்க்கும் பழமல வுள்ளிரு ளகலச்
செயிர்க்குங் கருணை திகழ்செய்ஞ் ஞானச்

சோதி வடிவே துரிய நிலையு
மாதியு நடுவு மந்தமுங் கடந்து
தேறு பல்கலைத் தெளிவின் சாரமா
யூறு மன்ப ருள்ளத் தென்று
நண்ணும் விசுவ நாத ரொருபாற்
பெண்ணு மாகிப் பெரிதி யாருங்
கருத ருஞ்சிவ காசி நகர்வள
ரொருபெருந் தருவே யுனகழ லிணையைப்
பன்மலர ருச்சனை பண்ணி லம்மலர்
நன்மல ரேனு நாழிகை சென்றால்
வாடு மன்றிநின் மாலிய மும்மாம்
அதனால் நீடு மொருவா நீர்மைத் தாமெனப்
பாடும் பணியே பணியா வுற்று
நாடும் பல்பா நாண்மலர் நானுஞ்
சாத்தினன் றமிழ்வே தங்க ளோதி
யேத்தினன் செங்கை யிரண்டுங் கூப்பி
யுவந்தினி திதுவென் றுள்ளங் கொண்டு
சிவந்தவாய் திறந்து செப்பல் வேண்டுந்
தந்தை தாய்பார் சகோதரர் தார
மைந்த ரிளமை வனப்பு முதலிய
பொருளல் லவற்றைப் பொருளென் றுணரு
மருளாற் சன்மம் வரவரப் பெற்றுக்
கால மெல்லாங் கழித்துவிட் டேனென்
போலறி வீனரிப் புவியி லுண்டோ
வினிமே லேனுமெய் யெதுவெனத் தேர்ந்து
கனியினு மினியநின் கருணைக் கிணங்கும்
பத்தி மார்க்கம் பழுக்கும் படியுயர்
சித்தியா முபாயஞ் சிறிதோன் றெனக்கே. (9)

எனக்குருகு முள்ளமுற லென்றுசெரு வெல்லாங்
கனக்குருகு முள்ளசிவ காசி—தனக்குட்
சுயம்புவாய் வந்தவர்மெய் தோயு முமையே
யியம்புவாய் வந்தனஞ்செய் தேன். (10)

என்றூன் பயல்சிவ காசித் தடங்கண்ணி யென்னுமுமை
தான்றூர் புணர்ந்து மகிழ்விசு வேசர் தமதுருவிற்
றோன்றுத தாமிர மன்முத லோரென்பு தோன்றலின்றே
லான்றுரை யாவது கேட்பீர் பிரம மவரெனற்கே. (11)

அவனவ ளதுவென லாகி யண்டப்
பகுதி யெல்லாம் பரந்துயிர்க் குயிரா
யுள்ளிருந் தவ்வுயி ருஞற்றும் வினைக்குத்
தக்க வாறுதநுகர ணுதி
கருணையோ டருளிற் காக்குங் காரண
கருத்த னென்னுங் கறைமிடற் றிறைவன்
வானுற வோங்கி மந்தியு மறியா
மரன்செறி யிமய மால்வரைக் கண்ணும்
பழம்பதி யாகிய பாண்டி நாட்டிற்
கற்கரி முன்னங் கரும்பு தின்பதும்
பொய்கை யொன்று பொன்மலர் பூப்பது
நரிகளெல்லா நற்பரி யாயதும்
பரிக ளெல்லாம் பலநரி யாயதும்
வாரி யேழும் வந்தொன் றுக
வைகப் பெற்றதும் வனக்க ருங்கரி
வெண்பெருங் கரியா விளங்கப் பெற்றது
மாகிய வனந்த வற்புத மிகுத்த
வளந்தரு மதுரை மாநகர்க்கண்ணு
மலரயன் திருமால் வானோ ரேனோர்
நேரிற் காண நின்னை மணஞ்செய்
யற்றை ஞான்றி லதிக மிருதுவா
மனிச்சமென் மலரு மன்னத் தூவியும்
படினும் பதைக்குநின் பாத மலரை
யிரக்கஞ் சிறிது மின்றி யெடுத்து
வன்கருங் கல்லில் வைத்து நின்ற
தறிந்தன னதனு லச்ச மிலாம
லென்மனக் கல்லினு மெடுத்து வைக்கத்

உ

சைவசித்தாந்தம்

(தொடர்ச்சி.)

தனுகரணபுவனபோகங்களும், அவைமூலமாயுள்ள பெத்தமுத்திகளும், அப்பெத்தமுத்திகளிற்படும் பேதங்களனைத்தும், மேற்கூறிப்போந்த தத்துவங்களாலாயினவென்றும், அத்தத்துவங்கள் உயிர்களோடியையவனவன்றி, முதல்வனோடியையவனவல்லவென்றும், நால்களானும் பொருந்துமாற்றானுந் தெளியவுணர்ந்து, அத்தத்துவங்களைக் கழியுமுறைமையின் வைத்துக்கழித்து, அவற்றிற்குமேலாய் நிறபதொன்றனை ஐயந்திரிபின்றி உணரப்பெற்றோன் யாவன் அவனே உண்மையறிவுடையன் என்க. இனிப்புறக்கருவி அறுபதாவன:— பிருதிவியின் கூறு ஐந்து: அவை மயிர், எலும்பு, தோல், நரம்பு, தசை. அப்புவின்கூறு ஐந்து: அவை நீர், உதிரம், சுக்கிலம், மூளை, மச்சை. தேயுவின் கூறு ஐந்து: அவை ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம், சோம்பல். வாயுவின் கூறு ஐந்து: அவை ஓடல், நடத்தல், இருத்தல், கிடத்தல், நிற்றல். ஆகாயத்தின் கூறு ஐந்து: குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம். ஆகப் பஞ்சபூதங்களின் காரியம் இருபத்தைந்து. பிருதிவியின் வழிநாடி பத்து: அவை இடைகலை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்தி, சிகுவை, அலம்புருடன், சங்குனி, வைரவன், குகுதை. வாயுவின் வழிநாடி பத்து: அவை பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன, தனஞ்சயன். ஆகாயத்தின் வழித்தான ஏடணை மூன்று: அவை அருத்தவேடணை, புத்திரவேடணை உலகவேடணை. ஏடணை - பிணக்கு. வாக்காதியின் தொழில் ஐந்து: வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம். பிரகிருதியின்வழித்தான குணம் மூன்று: அவை சாத்துவிகம், இராசதம், தாமதம். விந்துவின் வழித்தான வாக்கு நான்கு: அவை சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி. ஆகப்புறக்கருவி அறுபதுங்கண்டுகொள்க. இத்தத்துவங்களெல்லாம் ஆன்மாவைப்பற்றி நிற்பன: எதன்பொருட்டெனில் இருவினைகளை நுகர்வித்து நீக்குதற்பொருட்டும், அதனாற் பருவமெய்திய வழி மேலைக்கு வித்தாகாதவாறு தீக்கையானவற்றை முதிர்வித்துப் பற்றறக்கழித்தற்பொருட்டும் அவைகழியுமுகத்தால் எல்லாவநத்தங்களுக்குமூலமாகிய வாணவமலத்தைப்போக்குதற்பொ

நுட்டுமாமென்க. மேலே இருளெனக்கூறப்பட்ட ஆணவமலமும் அதன்பின்னாகக் கருமமலமெனப்பட்ட நல்வினை தீவினைகளும் அதன் பின்னாக மாயை இரண்டெனக்கூறப்பட்ட மாயாமலமும் ஆகியமூன்றுமலங்களும் நெல்லுக்கு உமி முளை தவிடுபோல, உயிரைப்பந்தித்து நின்று முறையே போத்திருத்துவமும் போகமும் பந்தமும் பண்ணுவனவாம். ஆணவமலம் போத்திருத்துவம் பண்ணுதலாவது நெல்லின்கணுள்ள முளை ஆண்டுத்தோன்றுதற்கு நிமித்தகாரணமாகிய உமிபோலத் தோற்றத்திற்கு நிமித்தகாரணமாகிய சுகதுக்கங்களை முறுகுவித்துநின்று அவற்றை உயிர்நுகருமாறு நிலைபெறுத்துதல். கன்மமலம்போகம்பண்ணுதலாவது நெல்லின்கண் உளதாகிய முளைத்தற்சத்தி முளையைத் தோற்றுவிக்குமாறுபோல உயிரின்கட் சுகதுக்கங்களை முதற்காரணமாய்நின்று தோற்றுவித்தல். மாயாமலம் பந்தம்பண்ணுதலாவது முளைத்தற்கு அனுகூலஞ்செய்து உடனிற்குந் தவிடுபோல அச்சுகதுக்கங்கள் ஆண்டுத்தோன்றுதற்குத் துணைக்காரணமாய்த் தன்காரியமாகிய தனுகரணமுதலியவற்றையும் உயிரையுமியைவித்துநிற்றல். ஞானமிர்தநூலுடையாரும் " பந்தம்போகம் போகசிறுத்துதலும் வந்ததுமாயை வினைமலத்து " என்றார்.

இம்மலங்களோடு சுகதுக்கவிளைவுகட்கெல்லாம் இடமாய்நின்று வியாபகமாகியவான்மாவின் அறிவு இச்சை செயல்களை ஏகதேசப்படுத்துவதாகிய மேற்கூறிப்போந்த மாயாகாரியமும் அவ்வம்மலங்களை யவ்வத்தொழிலிற்படுத்திப் பாகம்வருவிக்குஞ் சிவசத்தியுமாகிய இரண்டையுஞ்சேர்த்து ஐந்தெனவுங் கூறுவாருமுளர். ஆன்மாவின் பிறப்பு இறப்புக்களெல்லாவற்றிற்குங் காரணம் இவ்வைவகைமலங்களாம். இம்மலங்களைப்போக்கி முத்தியிற்சேர்க்கின்றவர் சிவபிரான் ஒருவரே. அவர் குறைவில்லாத மங்கலகுணங்களை உடைமையாலும் ஆணவமலத்தினின்றும் அநாதியே நீங்கிநிற்றலானும் என்னுந்தாது கிடத்தலெனப் பொருள்படுதலால் இறுதிக்காலத்து உலகமெல்லாம் தம்மிடத்து ஒடுங்கிக்கிடத்தலானும் அடியார்களது மனம் தம்மிடத்துக்கிடத்தலானும் என்னுந்தாது மெலிவித்தலெவுனம் மிகுவித்தலெனவும் பொருள்படுதலால், ஆன்மாக்களின் பாசத்தைமெலிவித்து ஞானத்தை மிகுவித்தலானும், அறிவின்மேம்

பட்டவர்கள்சிவன்எனக்கூறப்படுவர். அவர்மேலெனப்படுவனயவை க்கும்மேலானவர், மாலெனப்படுவன எவையும் மாற்றுமின்றவர், நூலெனப்படுவன யெவையு நூவன்றவர், சிற்சத்தியை ஒருபாகத்திலுடையவர், முதலில்பிரமதேவரைப்படைத்து அவரினின்றும் விட்டுணுமுதலிய தேவர்களைஉண்டாக்குகின்றவர், அவர் இலர்எனில் எல்லா வுலகங்களும் மிகுந்த வலிய இருளினாலே மூடப்படுந் தன்மையுடையனவாம், பகல் இரவு உளது இலது என்னும் பகுப்பு இல்லாத அநாதிகாலத்தில் சிவன் ஒருவனே யுளன், அவனிடத்திலேயே மிகுந்த ஞானம் வெளிப்பட்டோங்கும். எங்குள்ள யாவும் இவன் வசத்தனவாம். எவ்விடத்திலும் இவன் ஒரு பொருளின் வசத்தை யடையான். எவ்விடங்களும் இவனுக்கு விழிகளாம், முகங்களாம், கால்களாம், கைகளாம், வடிவங்களாம், இவன் இல்லாத இடம் இல்லை விட்டுணு, பிரமா, தேவர்கள், அசுரர்கள், யோகிகள், வேதம், வேதாந்தம், மற்றுமுள்ள பொருள்கள் எல்லாம் இப்பரமேசுவரனுடைய திருவடிகளைக் காணவேண்டுமென்ற ஆசையால் இன்னுந் தேடுகின்றன. இச்சிவனேயல்லாது முத்தியை யடைவிக்கின்றவர்கள் ஒருவருமில்லை. இவ்விதமாக வேதங் கூறும்.

எல்லாரையும் முற்றத்துறந்து, யாவரும், என்றும், தியானஞ் செய்யப்படு முதல்வன் சிவன் ஒருவனே யென நான்குவேதங்களின் முடிவாசிய அதர்வசிகை கூறியது. விட்டுணு முதலிய தேவர்களெல்லாம், அம்முதல்வன் திருவடிகளைத்தியானஞ்செய்யும் பசுக்களாம். அவன் அருள் சேர்தலால் ஒரோ விடத்து அவ்விட்டுணு முதலிய தேவர்களையும் தியானப் பொருளாகப் புனைந்து கூறும். ஆதலால் கிடைத்தற்கரிய மானுட தேகத்தைப் பெற்றவர்கள் சிவபிரான் திருவடிகளுக்கு அன்பு பூண்டொழுகி முத்தியை யடையக்கடவர்கள்.

திருச்சிற்றம்பலம்.

ஏகன் அனேகன் என்னும் குறள் வெண்பாவின் விருத்தியாகிய

சைவசித்தாந்த விளக்கம்.

முற்றியது.

மெய்கண்ட தேவர் திருவடி வாழ்க

சிவஞானயோகிகள் திருவடி வாழ்க.

இங்ஙனம்,

சுப்பிரமணிய பிள்ளை.

மதுரை, திருஞானசம்பந்த மூர்த்தி மடம்.

கல் நார்.

இயல்பு:—இந்த வஸ்துவுக்கு ஆங்கிலத்தில் 'அஸ்பெஸ்டாஸ்' என்றும் பிரெஞ்ச் பாஷையில் 'அஸ்பெஸ்ட்' என்றும் பெயர். இவ்வார்த்தையின்பகுதி 'க்ரீக்' பாஷையினின்றும் எடுக்கப்பட்டது. அதற்கு உட்கொள்ளமுடியாதது என்று பொருள்படும். இது சிகிமுகிக்கல் கூழாங்கல் போன்ற ஓர்விதக் கல்லின் உட்புறத்தில் பிணைந்து காணப்படும். இந்தக் கல் பெரும்பாலும் இயற்கையில் கடினமாகவேயிருக்கும். இவ்வஸ்துவைத் தனியாய்ப் பிரித்தெடுத்தால் மெல்லிய பஞ்சிழைகளை ஒன்றுசேர்த்துத் திரித்திரிப்பது போல அவ்வளவு இளக்கமாய்க் காணப்படும். இத்தன்மையுடைத்தாயிருக்கையிலேயே இதற்கு "அஸ்பெஸ்டாஸ்" என்றும், "அமியாந்தஸ்" என்றும் பெயர். இவ்வஸ்து சுத்தமாயிருக்கும்போது பச்சை கலந்த வெளுப்பு நிறமும், முத்துப்போன்ற ஓர்வித நீரோட்டமும் தோன்றும். இப்பொருளின் மற்றொரு பேதம் மரத்தின் தன்மையை ஒத்திருக்கும். இதற்கு ஐரோப்பியர் 'மலைமரம்" என்று பெயரிட்டிருக்கிறார்கள். இது இயற்கையில் கட்டிகளாக அகப்படும். இது கபில வர்ணமாயும் மரத்தைப்போல் கடினமாயும் இருக்கும். இதன் இழைகள் ஒன்றுக்கொன்று சமரேகையா யிராமல் பிணைந்திருக்கும். நெகிழ்வுள்ள கல்நாருக்கு ஆங்கிலேயர் "மலைநெட்டி" என்று பெயரிட்டிருக்கிறார்கள். அதைத் தண்ணீரில்போட மிதக்கும். தொட்டுப் பார்த்தாலும் நெட்டியைப்போலவேயிருக்கும்.

உண்டாகும் தேசங்கள்:—இவ்வஸ்துவானது பீட்மாண்ட், ஸேவாய், ஸால்ஸ்பர்க் டைரோஸ், டாபினிக், ஹங்கேரி முதலிய தேசங்களிலும் ஐக்கிய மாகாணங்களிலுள்ள ஸைலீஷியாவிலும் வட அமெரிக்காவின் வடபாகமாகிய கானடாவிலும், தென் ஆப்பிரிக்காவிலுள்ள உம்சிங்காடிவிஷனிலும், இங்கிலாந்து தேசத்தின் தென்மேற்கிலுள்ள காரன்வாலில் ஸெயின்ட்கெவர்ன் என்னுமிடத்திலும் லிஜார்ட்பாய்ன்ட் என்னுமிடத்திலும், பால்டா, ஷெட்லெண்டு, ஷைநெஸ், ஸதர்லெண்டு முதலிய இடங்களிலும் அகப்படும். மிகவும் சுத்தமானதாயும், வளையக்கூடியதாயுமுள்ளது வட அமெரிக்காவிலுள்ள கான

டாவில் கிடைக்கிறது. மலைத்தோலென்றும், மலைக்காகிதமென்றும் சொல்லப்படுவது காரன்வாலில் உள்ள வான்லாக் ஹெட் என்னுமிடத்தில் கிடைக்கிறது. ஆஸ்திரேலியாவிலுள்ள நியூஸௌத்வேல்ஸ் மாகாணத்தில் குண்டகேயில் ஏராளமான கல்நார் அகப்பட்டிருப்பதாயும், அங்கே சுரங்கங்களேற்பட்டு வேலைசெய்து வருவதாகவும் தெரியவருகிறது.

உபயோகங்கள்:—கல்நாரைக்கொண்டு தடிப்பான துணிகள் செய்யப்படுகின்றன. இத்துணிகளில் நெருப்புப்பற்றுகிறதில்லை. ஆகையால் இதனைத் திரைச்சீலைகளுக்கும், எரியும் நெருப்புக்குமத்தியில் போகத்தகுந்த சட்டைகள் செய்வதற்கும், கந்தகத்திராவகம் முதலியவற்றை வடிகட்டுவதற்கும் உபயோகப்படுத்தி வருகிறார்கள். தவிர கல்நாரால் கயிறுகளும் வடங்களும் முரட்டுத்துணிகளும் செய்கிறார்கள். இவைகளை அடிக்கடி உராய்வதனால் நெருப்புப்பற்றிக் கொள்ளக்கூடிய இடங்களில் தென்னைநாரைக்கொண்டாவது வேறெந்தநாரைக்கொண்டாவது செய்யப்பட்ட கயிறுகள் வடங்கள் முதலியவைகளுக்குப் பதிலாகவும் உபயோகப்படுத்தி வருகிறார்கள். பெருத்த யந்திரசாலைகளில் நீராவியினாலாவது வேறெந்த சக்தியினாலாவது அதிவேகமாய்ச் சுற்றிக்கொண்டிருக்கும் ஒரு உருளையின் சலனத்தை வேறொரு உருளைக்கும் உண்டுபண்ண வேண்டுமானால் இவ்விரண்டு உருளைகளையும் ஒரு கயிற்றினால் சேர்த்துவிடவேண்டும். எப்படியெனில் போதுமான அளவு தடிப்பாயும் நீளமாயுமிருக்கும் ஒரு கயிற்றின் இரண்டு முனைகளையும் நன்றாய் முடிந்து அக்கயிற்றைக் கொண்டு இவ்விரண்டு உருளைகளையும் சேர்த்து விடவேண்டும். இதற்கென்று உருளைகளில் செதுக்கப்பட்டிருக்கும் பள்ளத்திலேயே இக்கயிறு போகுமாதலால் உருளைகள் வேகமான சலனத்தில் இருக்கும்பொழுது கயிற்றுடன் உராய்ந்து சூடுண்டாகக்கூடும். சூடு அதிகரித்து அபாயம் நேரிடாமல் இருக்கவேண்டுமானால் கயிறுகள் நெருப்புப்பற்றக் கூடாதவைகளா யிருக்கவேண்டும். இவ்விஷயத்தில் கல்நார்க்கயிறுகள் மிகுந்த உபயோகமானவை. அவ்வாறே ரெயில் வண்டிச் சக்கரங்கள் தண்டவாளங்களின் மீது உருளுங்காலத்தில் விளிம்புகளின் உட்புறங்களில் உராய்தலினால் நெருப்புப்பற்றி அபாயம் நேரி

டாமல் இருக்கும்படி கல்நார் முரட்டுத்துணிகளைச் சக்கரவிளிம்புக ளின் நடுவே பொருத்தியிருக்கிறார்கள். வர்ணங்களில் கல்நாரைக்கல ந்தால் அவ்வர்ணங்கள் பூசப்படும் இடங்களில் நெருப்புப்பிடிக்கிறதி ல்லை. சாஸ்திர ஆராய்ச்சிகாலத்தில் உபயோகிக்கும் டெஸ்ட்டியூப் எ ன்னும் கண்ணாடிக்குழாய்களில் ரசாயனபேதத்தை அறிவதற்காக வஸ்துக்களைச் சேர்க்கையால் எரியச்செய்வது வழக்கம் இக்குழாய்க ள் கடினமான கண்ணாடியாற் செய்யப்பட்டிருக்கின்றன. இவைகளி ன் உட்புறங்களில் வஸ்துக்களை எரியச்செய்யும்பொழுது வெளியில் ஏதேனும் வாயுரூபமாய்ப் போய்விடக்கூடுமானதால் எடைமுதலியன குறைந்து ஆராய்ச்சிக்கு இடையூறு உண்டாகக்கூடும். இதைத்தடுப்ப தற்காக இக்குழாய்களின் வாயைத்தக்கைபோட்டு மூடுவது வழக்கம். அப்படி மூடுங்காலங்களில் குழாய்களுக்குள் எரிச்சல் அதிகப்பட்டால் தக்கைகளை பெரித்து விடுவதுடன் உள்ளிருக்கும் வஸ்துக்களும் கெட் டுப்போகும்.

இதைத்தடுப்பதற்காக கல்நார்த்தக்கைகள் போடலாமென்று ஒபிட் என்ற ராசயன பண்டிதர் சொல்லுகிறார். இரும்புப்பெட்டிக ளை நெருப்பின் அபாயமில்லாமற் செய்யவும், நெருப்பின் பயமில்லாத வீடடுக்கூரைகளைத் தயார்செய்வதிலும் கல்நார் உபயோகப்படுத்தப் படுகிறது. ஐரோப்பிய நாடுகளில் சிலேட்கற்களால் ஓடுசெய்யும்பொ ழுது அவைகளில் கல் நாரைச்சேர்க்கின்றார்களாம். அப்படிச்செய்வ தனல் கூரைகளில் நெருப்பு சுலபமாகப்பற்றாது. கல் நார் கலந்த பூரியோலைட் என்ற ஒருவகைத்தாது வஸ்துவைக் கொண்டு செங்கல் செய்கிறார்கள். இக்கற்களிலும் சுலபமாய் நெருப்புப்பற்றுவதில்லை யாம்.

சுதேசபரிபாலினி.

இராஜகுமாரரின் வருகை.

நம்மையாளும் எட்வேர்ட் சக்கரவர்த்தி 1875-ம்வூ நம் இந்தியா தேசமுழுவதும் சுற்றுப் பிரயாணம் பண்ணி தாம் ஆளப்போகிற பிரஜைகளின் நடையுடை பாவனைகளை நேரில் கண்டுகளித்துச் சென்றது அநேகருக்கு ஞாபகம் இருக்கலாம். அவ்விதமே அவர் குமாரரும் நம் தேசத்தைக் கண்டுகளித்துப்போகும் வண்ணம் தம் மனைவியுடன் நாளிதுமீ 9௳ "ரினௌன்" என்ற அழகான மரக்கலத்தில் நம் பம்பாய் நகர் வந்து சேர்ந்தார்கள். பீரங்கி வெடி சப்தத்தால் கப்பலின் வரவு தெரிய வந்தது. ஜனங்கள் அக்கப்பலின் வரவைப் பார்க்கும் வண்ணம் திரள் திரளாய்க் காலைமுதலே சென்று கொண்டிருந்தார்கள். மாலை $3\frac{1}{4}$-மணிக்கு நம் இராஜப் பிரதிநிதியாகிய லார்ட் கர்ஸனும் அவர் சுந்தர மனைவியாரும் நம் இளவரசரையும் அரசியையும் எதிர்கொண்டழைக்கச் சென்றார்கள். பம்பாய் கவர்னர் அவர்களும் பின் சென்றார்கள். சுமார் முக்கால் மணி நேரத்துக்கெல்லாம் எல்லோரும் கப்பலை விட்டிறங்கிக் கரைவந்து சேர்ந்தார்கள். நம் இளவரசரும் அரசியும் நம் பரதகண்ட பூமியில் தம் திருப்பாதங்களை நாட்டியவுடனே பீரங்கி வெடிகள் முழங்கத் தலைப்பட்டன. அச்சமயம் அப்பெருங் கூட்டத்தில் சிறிதும் சப்தமின்றி எல்லோரும் ஆனந்தக்கடலில் ஆழ்ந்தினார்கள். அந்நாள் குருவாரம். நம் சக்கரவர்த்தி பிறந்த நாள். ஆகையால் ஜனங்களுடைய கொண்டாட்டம் பின்னும் அதிகரிக்க இடமுண்டாயிற்று. கரை வந்து சேர்ந்தவுடன் இளவரசரை உபசரிக்கும் வண்ணம் மிக்க அலங்காரத்துடன் அமைக்கப்பட்ட கொட்டகைக்கு எல்லோரும் வந்துசேர்ந்தார்கள். அநேகர் நம் இளவரசருக்குத் தெரிவிக்கப்பட்ட பின்னர் எல்லோரும் விசுவகர்மாவின் சிருஷ்டியோ அல்லது மயனால் சிருஷ்டிக்கப்பட்ட மயக்கந்தரத்தக்க மாளிகையோ என்று கண்டோர் ஐயுறு வண்ணம் அலங்கரிக்கப் பட்டிருந்த சிங்காரக் கொட்டகையின் மேடைக்குச் சென்றனர். அதற்கு முன் புறத்தில் பெரிய உத்தியோகஸ்தர்களும் பின்புறத்தில் மகுடாதிபதிகளும், மன்னர்களும் புடைசூழ நம் இளவரசரும் இளவரசியும் ஏற்படுத்தப் பட்டிருந்த சிம்மாசனத்தில் வீற்றிருந்தனர். உட்காரவே பல்லாயிரக் கணக்கான ஆனந்தக்கூச்சல் செவிடுபடும்படி முழங்கப்பட்டது. அவ்

வானந்தக் காட்சியைக் காணப் பதினாயிரம் கண்களும் போதா. உடனே நம் இந்திய சிங்கமான ஆனரபிள். ஸர். பி. எம். மேதா அவர்கள் (மேதாவி யென்றே இவரைக் கூறல்வேண்டும்) தம் சங்கத்தார் தம்மைப் பின் தொடர்ந்துவர முன்னோக்கிச் சென்று இளவரசருக்கும் அரசிக்கும் வணக்கஞ் செய்தனர். உடனே லார்ட் சர்ஸன் அவர்களைத் தெரிவிக்க முனிசிபல் வந்தனோபசாரப் பத்திரிகை நம் ஸர். மேதா அவர்களால் வாசிக்கப்பட்டது. அதில் குபேர நகராகிய பம்பாய் ஆங்கிலேயருக்குக் கிடைத்த வரலாறும் அதன் முற்கால தற்கால ஸ்திதியும் வெகு அழகாய் எடுத்துக் காட்டப்பட்டிருந்தன. அதனைக் கேட்ட இளவசர் "கண்டவர்மனமும் கண்ணுங் கவர்ந்திட வனப்பு வாய்ந்த" இவ்வற்புத நாட்டின் காட்சி பிரமிக்கச் செய்துவிட்டது என்றும் தமக்குள்ள ஆனந்தத்துக்கு அளவில்லை யென்றும் இராஜ விசுவாசத்தைத் தாம் மிகவும்மெச்சுவதாகவும் தம் வரவின் ஞாபக சின்னமாய் அந்நகரத்தார் தம் பெயரை ஒரு தெருவிற்கு இட்டதைப்பற்றித் தமக்கு இருக்கும் சந்தோஷத்துக்கு அளவில்லை யென்றும் தாம் முன்னரே இக்குபேர நகரைப்பற்றிப் பல விஷயங்கள் படித்தறிந்திருப்பதாகவும் இந்தியாவினிடத்தும் அதன் விசுவாசமுள்ள பிரஜைகளிடத்தும் தமக்கு என்றும் அத்தியந்தப் பிரியமென்றும் அப்பிரியம் சிறு பிராயத்திலேயே தம் தந்தையாராலும் தம் அருமைப் பாட்டியாராலும் ஊட்டப்பட்டதென்றும் தமக்குள்ள திருப்தியை வெளிவிட்டு வெகு அழகாய்ப் பேசினர். அதன் பின்னர் மேடையினின்றும் இறங்கி வருங்கால் இலக்ஷக்கணக்கான ஜனங்கள் அன்புடன் ஆனந்தக் கூச்சலிட்டு ஆரவாரித்ததைக் கேட்டு அகமகிழ்ந்தனர். அங்குக் கூடியிருந்த ஜன சமூகத்தார் இளவரசர் வரவேற்று ஆனந்தக் கூச்சலிட்டதுபோல் நம் ஸர். மேதாவின் வரவு காலத்திலும் ஆனந்தக் கூச்சலிட்டுத் தம் அன்பை வெளியிட்டனர். இவ்வொருவருக்கே இவ்வொப்பிலா மரியாதை செய்யப்பட்டது. அவர் தெருக்களிற் சவாரிபோன பொழுதும் ஜனங்கள் அவ்வாறே கூவிக் குதூகலித்தனர். இம்மகானன்றோ நம் உண்மைப் பிரதிநிதி. இவரே ஜன நேசர். இவரே ஜன ரஞ்சிதர். இதனினும் ஆனந்தம் மனிதனுக்கு வேறெதுவேண்டும். இவரது கரங்களைப்பிடித்து இளவரசர் குலுக்கி மரியாதை செய்தார்களாம்.

மறுநாள் 10-மணி சுமாருக்குப் புகைப்படம் எடுக்கப்பட்ட பின்னர் சுதேச அரசர் இளவரசரை வந்துபார்த்து ஒவ்வொருவராக வணக்கம் செய்து போயினர். முதல் பேட்டி கோலாம்பூர் மகாராஜா அவர்களுக்கு கொடுக்கப்பட்டதாம். அவர்களுக்கு அத்தர் தாம்பூலாதிகள் கொடுக்கப்பட்டன. அக்காலத்தில் அவரவர் அந்தஸ்துக்கேற்ப பீரங்கிகள் முழங்கின. இச்சம்பவம் $12\frac{3}{4}$-மணிக்கு முடிவு பெற்றது. அன்று மாலை கவரன்மெண்டு ஹௌஸில் நடந்த கொண்டாட்டத்திற்கு 1500-பேர் விஜயஞ் செய்திருந்தார்கள். அன்று பிற்பகலில் பம்பாய் மைதானத்தில் சந்தை கூடியது. அதில் பல்லாயிரம் பேர் கூடியிருந்தனர். கனவான்கள் முதல் ஏழைகள் வரை பல அந்தஸ்துள்ளவரும் கூடிய அக்கூட்டத்தைக் கண்ணுற்று இளவரசரும் இளவரசியும் களித்தனர்.

11௳ சனிக்கிழமை இளவரசரும் இளவரசியும் தம்மை வந்து பார்த்த சுதேச மன்னர்களை யெல்லாம் தாம் திரும்பப்போய்ப் பார்த்தார்கள். கோலாப்பூர் மகாராஜா முதலியோர்களுடைய மாளிகைகள் மிகவும் விமரிசையாய் அலங்கரிக்கப்பட்டிருந்தன. இளவரசருக்கும் இளவரசிக்கும் உண்டான திருப்திக்கு அளவில்லை. அன்று பிற்பகலில் பம்பாயில் புதிதாகக் கட்டப்படும் பொருள்காட்சி சாலைக்கு (மியூஸியம்) வேல்ஸ் இளவரசர் அஸ்தி வாரக்கல் நாட்டினார். இதற்கு "வேல்ஸ் இளவரசர் மியூஸியம்" என்று பெயர் இனி வழங்கும். அச்சமயம் ஜனங்கள் கைக்குட்டைகளை ஆகாயத்தில் வீசி ஆரவாரத்தால் உற்சாகம் காட்டி ஆனந்தித்தார்கள்.

பின்னர் அவர்கள் துறைமுகஞ்சென்று ஹயாசிந்து என்றகப்பலைப் பார்வையிட்டு கவரன்மெண்டு ஹௌஸுக்குத்திரும்பினார்கள். அன்று பிற்பகலில் பம்பாயிலுள்ள இந்திய மாதர்கள் அவ்வூர் நகர மாளிகையில் இளவரசியாருக்கு வந்தனோபசாரப் பத்திரிகை வாசித்தார்கள். அம்மாளிகை மிகவும் அழகாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அங்கோர் வெள்ளிச் சிம்மாசனம் போடப்பட்டிருந்தது. அதில் இளவரசியார் வீற்றிருந்தார்கள். அச்சமயம் லேடிஜம் ஸெட்ஜி ஜிஜிபாய் முதலிய சீமாட்டிகள் அலங்கார உடைகள் தரித்துக்கொண்டு இளவரசியாருக்குச் சில சடங்குகள்செய்தார்கள். இவை திருஷ்டி கழிப்பதற்குச் செய்யப்பட்டன போலும்.

பார்ஸி மாதரசு தேங்காயையும் முட்டையையும் கையில்வைத்துக்கொண்டு இளவரசியாரின் சிரசைச் சுற்றி ஏழுமுறை சுழற்றிப்பின் அவை உடையும்படி எறிந்தனர். ஹிந்து மாதரசிகள் இளவரசியாரின் சிரசைச் சுற்றி சோற்றுருண்டைகளை கல்யாண காலங்களில் செய்யும் விதம் சுழற்றி எறிந்தனர். ஒரு மாதரசி இளவரசியாரின் சிரசைச் சுற்றித் தன் கைகளைத் தன் பொட்டோரத்தில் வைத்து நெரித்தனள். ஆலத்தி சுழற்றிக் கொட்டினள் ஒரு மாது. இம்மாதிரியான சடங்குகள் இளவரசியாருக்கு மிக்க மனமகிழ்ச்சியைத்தந்தன. பின்னர் வந்தனோபசாரப்பத்திரிகை வாசிக்கப்பட்டது. இளவரசியாரும் மிகவும் அன்பு கூர்ந்து தம் கிஞ்சுக வாயால் மறுமொழி பகர்ந்தனர். பின்னர் அவ்வூர் பெரிய முத்து வியாபாரியாகிய கபூர்ச்சண்ட் என்பவருடைய மனைவியார் ஒரு பெருந்தட்டில் ஏராளமான முத்துக்களை வாரிக்கொண்டு வந்து இளவரசியாருக்கு முத்தபிஷேகம் செய்தது அற்புதக் காட்சியாயிருந்தது. அன்றிரவு கவரன்மெண்டு ஹௌஸில் ஒரு பெரிய உண்டாட்டுக் கொண்டாட்டம் நடந்தது. ஞாயிற்றுக் கிழமை இளவரசரும் இளவரசியும் கிறிஸ்துவ தேவாலயத்துக்குச் சென்றார்கள். திங்கட்கிழமை இளவரசர் பம்பாய்த் துறைமுகத்தில் புதிதாய்க் கட்டப்பட்ட டாக்குக்கு அஸ்திவாரக்கல் நாட்டினர். அன்றிரவு விருந்துண்டு பால் நடனம் புரிந்தார்கள். செவ்வாய்க்கிழமை சிலருக்கு பட்டவிருதுகள் அளிக்கப்பட்டன. பின்னர் யானைத்தீவு என்ற இடத்தில் ஒரு விருந்துண்டார்கள். அன்று இரவே இளவரசரும் இளவரசியாரும் பம்பாய் விட்டு இந்தூருக்குப் புறப்பட்டு விட்டார்கள். தெருக்களெல்லாம் தீப மயமாயிருந்தன. கப்பல்கள் தீபங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது இன்பகரமான காட்சியாயிருந்தது.

இளவரசர் நம் ஸர் பெரோஸிஷாமேடாவுக்குப் பேட்டிகொடுத்துப் பிரியமாய்ப் பேசி நம் இந்தியா விஷயமாய்ப் பல கேள்விகள் கேட்டு விஷயங்களைத் தெரிந்து கொண்டதுமன்றி இளவரசியாருடைய படங்களமைந்த 'ஆல்பம்' என்ற புத்தகத்தில் ஸர். மேடாவைக் கையெழுத்திடும்படியாகக் கேட்டுக்கொண்டனர். இஃது அவருக்குப் பெரிய கௌரவமே. இவர்கள் நம் நாட்டில் ஐந்து மாதம்

கள் சுற்றுப் பிரயாணம் செய்வார்கள். 11,000 மைல் தூரம் பிரயாணம் நடக்குமென்று தெரியவருகிறது. நம் இராஜதானியில் சென்னை மாநகரையும் மைசூரையும், அடுத்த ஜனவரி மாதம் வந்து பார்ப்பார்கள். அக்காலம் பல ஜில்லாக்களிலிருந்தும் பல கன தனவான்கள் அங்குச் சென்று இராஜ விசுவாசத்தைக் காட்டுவார்கள். இவ்விளந் தம்பதிகள் நம் நாட்டின் அற்புதக் காட்சிகளைக் கண்டு களித்து தேக ஆரோக்கியத்துடன் க்ஷேமமாய் ஊர் திரும்பும் வண்ணம் பரமதயாளுவான பகவான் அருள் புரியும்படி நம்நாட்டார் அனைவரும் பிரார்த்திக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். இப்பாக்கியவான்கள் நீடூழி வாழ்ந்து இன்புறுவார்களாக.

பத்திராதிபர்.

புத்தகக்குறிப்பு.

சிவஸ்தலமஞ்சரி:—இப்பெயர்புனைந்த புத்தகம் டெமி 15பாரங்கள்கொண்ட ஓர் அழகான புத்தகம். இதில் 274 சிவஸ்தலங்களின் வரலாறு நேர்த்தியாய்க் குறிக்கப்பட்டுள்ளது. இதனை இயற்றிய பென்ஷன் டிஸ்திரிக்டு முனிசீபு மகா-ா-ா-ஸ்ரீ வ. த. சுப்பிரமணிய பிள்ளையவர்களது முயற்சி பெரிதும் பாராட்டத் தக்கது. இப்பக்திமான் தாமே 170 ஸ்தலங்களை நேரில் சுற்றிப்பார்த்து வந்தவர். தாம் யாத்திரா காலத்தில் துன்புற்றது போல் ஏனைப்பக்தர் துன்புறு வண்ணம் அவர்களுக்குதவி புரியவே இப்புத்தகத்தை வெளியிட்டிருக்கின்றனர். இதன் விலை 6 அணு மிகவும் சொற்பம். இப்புத்தகம் ஒவ்வொரு சிவநேசரிடத்துமிருத்தல் இன்றியமையாதது. ஸ்தலங்களைக்குறித்த பல அற்புத விஷயங்கள் இதன் வாயிலாகவே விளங்கும். சென்னை லிங்கச்செட்டித் தெரு 292-ம் கிர். வீட்டில் இருக்கும் இந்நூலாசிரியருக்கே வேண்டுவோர் கடிதம் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். ஏனை க்ஷேத்திரங்களுக்கும் இவ்வாறுனஉபயோக முள்ள புத்தகங்கள் ஏற்படல் நாட்டுக்கு நன்மைபயக்கும். இந்நூலாசிரியரது நன் முயற்சி என்றும ஓங்கி நன்மை பயக்கும் வண்ணம் திருவருளைப் பிரார்த்திக்கின்றோம். "தொண்டர் தம்பெருமை சொல்லவும் பெரிதே."

பத்திராதிபர்.

ஜகத்ஜோதி

ஜிஹாங்கீர் ஜகத்ஜோதியின் கரங்களைப்பற்றிக் கொண்டு சில மொழிகள் கூறினுன் என்று கூறினேம். அவையாவன. "தன்னேரில்லா மங்கையர் செங்கைத் தளிர் மானே! பொன்னே! தேனே! ஆரமிர்தே! ஜிஹாங்கீர் சக்கரவர்த்தி கண்டார் உயிர் உண்ணும் உன் தோற்றத்திற்கு ஆளாகி உன் அடிபோற்றச் சித்தமாயிருக்கிருர். பெண்ணரசே! நீ அவர் தம் அரசியாகவுமிருக்க விரும்புவாயோ! கொஞ்சும் கிஞ்சுகமே! உன் கோவ்வைக் கனிதிறந்து குழலினுமினிய தீஞ்சொல்சிறிதுமிழற்றுவாயாகஎன்ருன். "பாவையர்கைதீண்டப் பணியாதார் யாவரே". பாலொடு தேன் கலந்தாலன்ன பணிமொழி பகரலுற்ருள் பாவையன்ன ஜகத்ஜோதியும்" அடியாளுக்கு என்ன சுவதந்திரமிருக்கிறது. அரசர் வாக்குக்கு எதிர் வாக்குண்டோ? "மன்னவர் எப்படி மன்னுயிர் அப்படி" என்று நடக்கவேண்டியது பேதையாகிய என் கடமை. அரசன் ஆக்ஞா கர்த்தா. அடிமையின் கடமை அவன் அடிவணங்குதலே" எனக் கிளர்ந்தாள் கிள்ளைமொழியாள். உடனே ஜிஹாங்கீரும் மலரினும் மெல்லிய அவளது கரங்களைப் பற்றியபடியே "மடமயிலே! உன்னை என் அரசியாக்கி உன்னத பதவியில் வைப்பது திண்ணம்" என்றுகூறி மணம் புரிவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யத்தொடங்கினுன். எங்கும் பேரிகை முழங்கத்தொடங்கின. நகரெல்லாம் விமரிசையாய் அலங்கரிக்கப்பட்டன. மகுடாதிபதிகளுக்கும், குறு நிலமன்னருக்கும் வித்துவான்களுக்கும் பிரபுக்களுக்கும் நண்பர்களுக்கும் உறவினர்க்கும் திருமுகம் அனுப்பலாயிற்று. மணப் பந்தர் ஜோடிக்கத் தொடங்கினர்கள். கல்யாண ஏற்பாடுகள் பலவும் ஒழுங்காகவும் சிறப்பாகவும் ஏற்படுத்தப் பட்டன. பற்பல தொழில்கள் ஒழுங்காய் நடக்கும் வண்ணம் பலபேர்களைத் தெரிந்தெடுத்து ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பொறுப்புக் கட்டப்பட்டது. எவ்வித சௌகரியங்களும் நன்கு கவனிக்கப்படவேண்டி தக்க பொறுப்பாளிகள் தலையில் அவ்வேலைகளைக்கட்டி அவை சரிவர நடக்கிறதை பேற்பார்க்க தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. செய்யப்பட்ட அனைத்தும்செவ்வையாகச்செய்யப்பட்டன. எங்கும்உண்டாட்டும் கொண்

டாட்டமுமாகவே இருந்தது. சகல கலைகளின் காட்சிகளையும் கண்கூடாச்செய்யப் பற்பல ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சிற்ப சித்திரகீதவிநோதங்கள் எங்கும் நிரம்பியிருந்தன. நாடறிய நன்மணமும் நடந்தேறியது. ஏழைகளுக்கு அன்னதானமும் சொர்னதானமும் வஸ்திரதானமும் அவர்கள் மனங்குளிர வழங்கப்பட்டன. வித்துவான்களுக்குத் தகுந்த வெகுமதிகள் விமரிசையாய் அளிக்கப்பட்டன. எல்லாச் சம்பிரமங்களும் சிறிதும் குறைவின்றி நடந்தன. ஒருமாதகாலம் இவ்விமரிசைகள் சிறிதும் தடையின்றி நடந்துகொண்டே வந்தன. அதிபதிகளும், நண்பர்களும் உற்றார் பெற்றார்களும் குதூகுலமாய்க்கூடிப் பொழுது போக்கினார்கள். அவர்களுக்கு அந்தஸ்துக்குத் தக்க சம்மானங்கள் செய்யப்பட்டன. ஐம்புலன்களுக்கும் நுகர்ச்சியுண்டாகும் வண்ணம் எவையும் நன்கு நடந்தேறினவென்றால் அதிகம் சொல்வானேன். ஜகத்ஜோதியின் திருமணச் சிறப்பு ஜகத்ஜோதிபோல் எங்கும் பரவிற்று. அத்தி முதல் எறும்பீருக உயிர் அனைத்தும் ஆனந்த மடைந்தன. சக்கரவர்த்தியும் ஜகத்ஜோதியும் நீர் விளையாடல், பூக்கொய்தல், உண்டுகளித்தல் முதலிய இன்பங்களில் பொழுதுபோக்கி ஆனந்த சாகரத்தில் அழுந்தினார்கள். ஜகத்ஜோதி ஆளும் அரசியானாள். அவளது அந்தப்புரம் அரசாட்சிக்கு இடமாயிற்று. அரசன் ஆக்ஞை அனைத்தும் அவ்விடமிருந்தே புறப்படத்தலைப்பட்டன. அவ்வரசியிட்டதே சட்டம். அடிக்கப்பட்ட நாணயங்களிலும் அவள் உருவம் விளங்கத்தலைப்பட்டது. அவளே உண்மையரசியானாள். ஆளுந்திறமை அவளுக்கு இயற்கையிலேயே அமைந்திருந்தபடியால் அது எவரும் புகழத்தக்கதாயிருந்தது. ஆண்மக்களைப்போல் பெண்களும் ஆளுந்திறமைக்கு அருகரல்லர் என்பது பொதுவாக ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அவர்களிற் சிலரது அற்புதத்திறமை எவரும் வியக்கற் பாலது. அப்படிப்பட்டவர் தோன்றுவது அரிதாகவே இருக்கும். இவ்வுலக சரித்திரத்தை ஆராயுங்கால் ஸ்திரீகளுக்கும் அரசாளும்படியான சக்தியைச் சர்வேசுவரன் அளித்திருக்கிறார் என்பதுநன்குவிளங்கும். ஒவ்வொருகுடும்பமும்ஓர் இராஜ்யமாகும்அக்குடும்பத்தைஆளுபவள் முக்கியமாய்ஸ்திரீயே. அச்சக்தியைக் கடவுள்அவளுக்குஅமைக்காவிடின் அவள் அக்குடும்பத்தைக்கொண்டுசெலுத்துவது சாத்தியமன்று. ஆகையால்ஸ்திரீகள் இயற்கையிலே

ஆளுந்திறமையுள்ளவர்களே. அவ்வாறு ஆளும்சக்தி சிலரிடத்தில் அதிகம் காணப்படுகிறது. அபூர்வமாய்க்காணப்படும்பொழுதெல்லாம் அச்சக்தி எவரும் அதிசயிக்கும் வண்ணமே காணப்படுகின்றது. நம்ஜகத்ஜோதி விஷயத்திலோ அது உலகம் வியக்கும் வண்ணம் அமைந்திருந்தது. அவள் அற்புத அறிவையும் சக்தியையும் எவரும் அஞ்சி வியவாமலிரார். அவ்வற்புதப் பிறவி அரிதாகவே உண்டாகிறதென்று உலக சரித்திரம் நமக்குப் புலப்படுத்துகிறது. நம் ஜகத்ஜோதியின் அற்புத அழகும், எவரும் அதிசயிக்கத்தக்கபடி அவளது அறிவும், மனோவிசாலமும் ஒருங்கு சேர்ந்திருந்தது அற்புதங்களினும் அற்புதமே. உலக சரித்திரத்திலும் அவள் ஜகத்ஜோதியாகவே விளங்கினள் என்றால் மிகையாகாது. உலக சரித்திரத்தில் பிரசித்தி பெற்ற அரசிகளாகிய எலிஸபெத், மேரி, கிளியோபாட்ரா, ஸெஸாஸ்டிரிஸ், இஸபெல்லா, சாண்ட் சுல்தானா, சுல்டானா ரிஜியா, முதலிய மாதரசிகளுக்கு நம் ஜகத்ஜோதி சிறிதும் குறைந்தவளல்லள். இவ்வாறு சாமர்த்தியத்துடன் அவ்வரசி இராஜ்ய பரிபாலனம் செய்து வரும் நாளில் ஜிஹாங்கிரின் மூன்றாவது குமாரனாகிய ஷாஜிஹான் சிறிது குழப்பம்செய்யத்தொடங்கினான். தக்ஷிணத்தில் இராஜாங்கத்துக்கு விரோதமாய்ச் சில கலகங்கள் உண்டாயின. அவைகளை அடக்க ஷாஜிஹான் சில சேனைகளுடன் அனுப்பப்பட்டான். அவன் அவ்விதமேபோய் அக்கலகங்களைத்தலையெடுக்கவொட்டாமல் அடக்கினான். அவன் சாமர்த்தியசாலி. அவன் சாமர்த்தியத்தியத்தையும் தாராள சிந்தையையும் கண்டு அவன் கீழ்ப்பட்ட காவலாளர் அவனிடம் அதிக பிரியம் காட்டினார்கள். அதனைக்கொண்டு அவன் அண்டத்தை ஒரு புரட்டுப்புரட்டலாம் என்றுநினைத்தான். அவன் ஜிஹாங்கிருக்கு மூன்றாம் குமாரன். மூத்தகுமாரன் பெயர் குஸ்ரு. அவன் தகப்பனுக்கு விரோதமாய் எழும்பின முட்டாள். இராஜ்யம்ஆளவேண்டும். அதிகாரம் வகிக்கவேண்டும் என்ற பேராசையே அவனை அவ்வாறு கலகம் செய்ய ஏவிவிட்டது. இப்படிப்பட்டவனையே பிதிர் துரோகி என்று கூறுவார்கள். தகப்பன் மனங்கோணாமல் நடக்கும் பிள்ளைகள் உலகத்திலிருந்து விடுவார்களானால் அத்தகப்பனுக்கு அதனினும் பெரும் பாக்கியம் வேண்டுவதில்லை. அஃது இல்லாத பிதா துர்ப்பாக்கியவானே. எல்லோரும் தசரத ராமனாகவும், பரசுராமனாகவும், பீஷ்மராகவு

மிருந்தால் இத்தலோகம் எவ்வளவு அழகாயிருக்கும். பாதிகுடும்பக்ச லகங்களும் குழப்பங்களும் ஒழியுமே. பிதாசொற்கடவாத புத்திரன் சகல பாக்கியங்களையும் பெறுவான். பிதா செய்யும் நன்றிகளைப் புத்திரன் ஒரு நிமிஷம் சீர்தூக்கிப் பார்ப்பானாகில் செய்ந்நன்றியை என்றும் மறவான். "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்பதை ஒவ்வொரு நிமிஷமும் புத்திரன் சீர்தூக்கிப் பார்க்கக் கடமைப் பட்டிருக்கிறான். தகப்பன் மனோபீஷ்டத்தைப் பூர்த்திசெய்விக்கிற புத்திரனுக்குச் சர்வாபீஷ்டமும் உண்டாவதிற்றடை யில்லை. அப்பிதாவின் மனங்கோணும்படி நடப்பவனுக்குத் தீமையே யுண்டாகும் என்பதற்கு உலகத்தில் பல திருஷ்டாந்தங்கள் காணலாம். பேராசைக் குணத்தாலும் தர்மா தர்ம ஞானமில்லாததாலுமே இக்குற்றம் இவ்வுலகத்தில் உண்டாகின்றது. ஆகையால் அவைகளைப் புத்திரர்கள் ஒழித்துத்தங்களுக்கு என்றும்பேரும் புகழையுந்தரும்படியான செயல்களைச் செய்வார்கள். மாதா பிதாக்கள் நம்விஷயத்தில் செய்யும் பேருதவிக்கு நாம் எத்தனை ஜனனம் எடுத்துக் கைம்மாறு செய்கின்றதென்றாலும் முடியாது என்று மனு முதலிய பெரியோர்கள் கூறியிருக்கின்றனர். ஆகையால் சத் புத்திரன் என்ற பெயரை எடுக்க ஒவ்வொரு புத்திரனும் முயல வேண்டும். இதனினும் வேறு யக்ஞம் வேண்டுவதில்லை. இதனினும் வேறு தர்மம் வேண்டுவதில்லை. "தன்னைப்பெற்று வளர்த்த ஆத்தாள் கிண்ணிப்பிச்சை எடுக்கத் தம்பி கும்பகோணத்தில் கோதானம் பண்ணுவதில்" யாது பயன். ஆகையால் இம்முக்கிய தர்மத்தை யனுஷ்டித்தலே புத்திரனின் முதற் கடமையாம். இதனையே முக்கிய கருத்தாகக் கொண்டு கூறவந்தன நம் இதிகாசங்கள். அவ்வாறான உத்த மோத்தமமான தர்மத்தை மறந்து குஸ்ரு கலகம் செய்யத் தொடங்கினான். நூர்ஜஹானது தீர்க்காலோசனையின் பேரில் ஜிஹாங்கீர் தன் சேனையைத்திரட்டி அதர்மத்தில் ஏற்பட்ட தன் புத்திரனாகிய குஸ்ருவைப் பஞ்சாப்வரை தொடர்ந்து சென்று பிடித்துச் சிறைப்படுத்தினான். "பெற்றமனம்பித்து பிள்ளைமனம் கல்லு" என்ற வண்ணம் புத்திரனை நேரிற்கண்டதே பிதாவுக்கு இரக்கம் வந்துவிட்டது. ஆகையால் அவனைச்சிரசாக்ஞைசெய்ய எண்ணங்கொண்ட ஜிஹாங்கீர் மனம் இளகி அவனை மன்னிக்கச் செய்தது.

அம்பட்டோடே விட்டால் உணரான் என்று அவனுடன் சேர்ந்து கலகம்செய்த அவன் சேனைகளில் பலரைக் கூட்டமாய் நிறுத்திச் சித்திரவதை செய்யச்சொல்லித் தன் மகன் குஸ்ருவை அவ்வரிசையூடே நடத்திக்கொண்டுபோய் அவர்கள் போடும் கூச்சல்களையும் அவர்கள் படும் கொடிய துன்பங்களையும் கண் கூடாகக் காணச்செய்தான். குஸ்ருமனம் நடுநடுங்கிற்று. அக்கொடுங்காட்சியைக் கண்ணுற்ற மாத்திரத்தாலேயே அவன் தான் சித்திரவதை செய்யப்பட்டதுபோல் உணர்ந்தான். அவ்வுணர்ச்சி அவன் ஆயுள்வரை அவன் மனம் விட்டுச் சிறிதும் அகலவில்லை. இதன் பின்னர் அவன் யாதொரு துஷ்டத்தனமும் செய்யாமல் பிதாவுக்கு அடங்கியிருந்து இன்பமாயும் உல்லாசமாயும் பொழுதுபோக்கி வந்தான். ஆனால் அவன் காவலிடப்பட்டவன்போல் பாதுகாக்கப்பட்டான். இவ்வாறு குஸ்ருகலகஞ் செய்த காலத்தில் அவனைத்தன்னிடம் ஒப்புவிக்கும்படி ஷாஜிஹான் தன் தகப்பனுக்குத் தெரிவித்தான். தன் சாமர்த்தியத்தைக் கண்டு தகப்பன் அவ்வாறு செய்வானென்பது அவன் கருத்து. தகப்பனாகிய ஜிஹாங்கீரோ அவ்வளவு மூடனல்லன்; அவனுக்கு இஷ்டமிருந்தாலும் ஜகத்ஜோதி அவ்வாறு செய்யச் சிறிதும் அனுமதி கொடாள் என்பது திண்ணம். ஷாஜிஹானுக்கு சிம்மாசனத்தின்மீது நோக்கமுண்டாகிவிட்டது. அதற்காகவே தனக்குப் பெரும் இடையூறாக இருக்கும் தமையனைக் கொல்ல வகை தேடினான். ஜகத்ஜோதி தன் கூரிய புத்தியால் இவ்வந்தரங்கத்தை யறிந்துத் தன் நாயகனுக்குத் தெரிவித்தனள். ஷாஜிஹானை இதற்காகத் தண்டினை செய்யும் வண்ணமும் வற்புறுத்திக் கூறினள். இது நிற்க. ஜிஹாங்கீருக்கு ஷாரியர் என்ற மற்றொரு குமாரன் உண்டு. அவனுக்கு, ஜகத்ஜோதி, ஷியர் ஆப்கனிடம் தனக்குப் பிறந்திருந்த பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கக் கருதியிருந்தாள். அவ்வெண்ணத்தை நிறைவேற்றவுத் தேசித்து ஜகத்ஜோதி ஷாஜிஹானுடைய கருத்தை ஜிஹாங்கீருக்குத் தெரிவித்தாள். ஷாஜிஹானே மஹா புத்திமான். சேனைகளின் மனத்தைத் தன் பட்சமான பாதுகாப்பாலும் தயாளத்துவத்தாலும் கவர்ந்து கொண்டான். அவனும் சேனையும் உடலும் உயிரும் போலிருந்தார்கள். அவர்கள் அவனுடன் சாவதற்கும் துணிந்து நின்றார்கள் அத்தைரியங்கொண்டு ஷாஜிஹான் தக்ஷிணத்திலிருந்த வண்ணமே

தகப்பனுக்கு விரோதமாக நடக்கத் தொடங்கினன். கலகஞ்செய்து பிதாவுக்குத்துன்பத்தை உண்டுபண்ணவேண்டுமென்பது அவன் முக்கிய நோக்கமன்று. ஆனால் ஜகத்ஜோதியின் நடவடிக்கைகளை அவன் சகிக்கவில்லை. அவள் நிமித்தமே அவன் தகப்பனோடு போராட்டங்கொண்டான். ஜகத்ஜோதியின் கருத்து அவனுக்கு நன்கு விளங்கிற்று. அவளிருக்கும் வரை தனக்குப் பட்டங்கிடைப்பதரிது என்பதே அவன் உண்மையான எண்ணம். சக்கிரவர்த்தி அவள் ஆதீனப்பட்டவன் என்பதை முற்றிலும் அறிந்தவன். அதுபற்றியே அவன் பிதாவுக்கு அடங்கவில்லை. சேனையின் பலத்தைக்கொண்டு பட்டத்தை அடைதலையும் எளிதாகவே எண்ணினன். அவன் அந்நோக்கங்கொண்டு தானே புதுப் பட்டப்பெயர்களைத் தரித்துக் கொண்டான். இச்சமாசாரம் சக்கிரவர்த்திக்கு எட்டியது. உடனே அவன் ஜகத்ஜோதியின் யோசனையின்பேரில் தன் தளகர்த்தனுகிய மொகபட்கான் என்னும் வீரனைத் தக்ஷிணத்துக்கு அனுப்பி ஷாஜிஹானைப் பிடித்துக் கொணரச்சொன்னன். மொகபட்கானும் இராஜ விசுவாசமுள்ளவன் மிகவும் சாமர்த்தியமுள்ளவன், வீரத்தன்மையிற் சிறந்தவன். அவன் ஒரு பெருஞ்சேனையுடன் புறப்பட்டுத் தக்ஷிணத்துக்குட்சென்று ஷாஜிஹானைத் தொடர்ந்து முறியடித்தான். ஷாஜிஹானே ஓடிப்போய் மற்றோர் இடத்தில் ஒளிந்துகொண்டான். மொஹபட்கான் அவனை விடாதுதொடர்ந்துபோய் கடைசியில் ஒரு கோட்டையில்கண்டு அவனைப்பிடித்துக்கொண்டான்.

(இன்னும் வரும்).

எஸ். சாமிநாதையர்.

———

மனிதனும் அவன் உடல்களும்.

[முன் தொடர்ச்சி.]

இந்த நரம்பு மண்டலங்கள் உடலின் ஒவ்வொரு பாகத்தைப்போன்று *கண்ணறைகளால் கட்டப்பட்டிருக்கின்றன. கண்ணறைகள் என்பவை பூதக்கண்ணாடி யென்று சாதாரணமாய் வழங்கி வரும் அணுதரிசனி யாகிய கருவியினுல் பார்க்கக்கூடியதும் அவைகளின் நானுவிதத் தொழில்களை யனுசரித்து விகாரப்படக்கூடியதுமாய்ச் சுற்றும் வளைந்து கட்டின சுவரையும் அதற்குள்ளடக்கமாகச் சில வஸ்துவையும் பொருந்தித் திட்டமாய் நிதானிக்கும்படி கூரியவரையறையுள்ள வெகு சிறிய பொருள்கள். இக்கண்ணறைகளை நோக்கும் பொழுது அவைகள் தங்கள் பாகத்திற்கு இன்னுஞ் சிறிய 2பேரணுக்களினுல் செய்யப்பட்டிருக்கின்றன. மேலும் இப்பேரணுக்களோ இன்னுஞ்சிறிய a அணுக்களினுல் செய்யப்பட்டிருக்கின்றன. b இரசாயன சாஸ்திர பிரதிபாதனஞ் செய்யும் அணுக்கள் இவைகளே. ஒவ்வொரு அணுவும் அவன் கொள்கையின்படி இரசாயன சாஸ்திரங்கூறும் ஒரு c பூதிய பதார்த்தத்தின் இன்னுஞ் சிறியதாய்ப் பிரிக்கக்கூடாத கடைசிமுடிவான சிறுதுகள். இவ்வணுக்களானவை எண்ணிறந்த வகைகளாக ஒன்றுடன் ஒன்று கூடிக்கலந்து தடித்த உடலின் d தேயுரூப பதார்த்தங்களும் e அப்புரூபபதார்த்தங்களும் f பிருதிவி ரூப பதார்த்தங்களும் ஆகின்றன. பிரம்மஞானிக்கு ஒவ்வொரு இரசாயன அணுவும் வேறொன்றின் உதவியின்றிச் சுயமாகத் தனியே ஜீவித்துவாழ்ந்திருக்கக் கூடிய உ

---

*கண்ணறைகள்=Cells

2 பேரணு=Molecule

a அணு=atom

d இரசாயன சாஸ்திரி=chemist

c பூதியபதார்த்தம்=chemical element

d தேயுரூபபதார்த்தங்கள்=Gases

e அப்புரூபபதார்த்தங்கள்=Liquids

f பிருதிவிரூபபதார்த்தங்கள்=Solids

யிருள்ள பொருளாம். மேலும் இவ்வணுக்கள் பல ஒன்று கூடி உண்டாகும் அதிக சங்கரமான பொருளும் உயிருள்ள வஸ்துவேயாம்; இன்னும் ஒவ்வொரு கண்ணறையும் கூட தனக்கெனச் சொந்தமாய் உயிர் வாழ்வு பெற்றிருக்கின்றது; இது இரசாயன அணுக்களும் பேரணுக்களும் கண்ணறைகளும் எல்லாம் ஒருங்கு சேர்ந்து உறுப்புக்களமைந்த ஒரு மொத்த ரூபமான சரீரமாய் இந்தச் சரீரமானது இவ்வணுக்களும் பேரணுக்களும் கண்ணறைகளும் தனித்தனி பிரித்து நின்று வாழும் வாழ்க்கைகளிலே அவைகளுக்குள்ள அறிவைப் பார்க்கிலும் வெகு உன்னதமான சைதன்னிய சொரூபத்திற்கு வாகனமாய் உதவி நிற்கின்றது. இந்தச் சரீரங்கள் அமைந்து நிற்பதற் கேதுவான சிறு பொடிகளாகிய துகளிதங்கள் இடைவிடாமல் வந்து கொண்டும் போய்க்கொண்டுமிருக்கின்றன. இப்படிப்போக்கு வரத்தாயிருக்கின்ற இந்தத்துகளிதங்களில் அநேகமானவை பூதக்கண்ணாடி யெனனும் அணுதரிசினியைக்கொண்டு பார்க்கும்பொழுது தெரியக்கூடியவை யாயினும் அவைகள் வெறுங்கண்ணுக்குப் புலப்படாதபடி அவ்வளவு சிறியவையான பல இரசாயன அணுக்கள் சேர்ந்த திரள்களாம். சொற்பம் இரத்தத்தை யெடுத்து அணுதரிசனியென்னுங் கருவியின் கீழ்வைத்துப்பார்த்தால் அதில் அநேக உயிர்ப் பொருள்கள் அசைந்து கொண்டிருக்கக் காண்போம். இந்த உயிர்ப்பொருள்களை a உதிராணுக்கள் என்பார்கள். இந்த உதிராணுக்கள் வெண்மை யென்றும் சிவப்பு என்றும் இருவகை. வெண்ணுதிராணுக்கள் பிணைப்பிலும் இயக்கத்திலும் b பலவிதமாய் உருவமாறுஞ் சாதாரண நுண்கிருமிகளை நெருங்கி ஒத்திருக்கும். அநேக வியாதிகள் சம்பந்தமாய நுண்கிருமிகள் பலவிதமானவை இருக்கின்றன. நம்முடைய சரீரங்களில் நட்புக்கிருமிகளும் விரோதக்கிருமிகளும் அதாவது நமக்குத் தீமைவிளைவிக்கும் சிலகிருமிகளும் நம்மையறியாமல் இடையில் நமக்குள்புகும் விஷக்கிருமிகளையும் பயனற்ற பதார்த்தங்களையும் மேல்விழுந்து பிடித்து விழுங்கி நாசப்படுத்தும் வேறுசில கிருமிகளும் இருக்கின்

---

a உதிராணு=Blood cropuscle இரத்தணுவென்றும் பெயருண்டு.

b பலவிதமாய் உருவமாறும் நுண்கிருமிகள்=Amoefic,

றனவென்று கலைவல்லோர் கூறுகின்றார்கள். சில நுண்கிருமிகள் வெளியினின்றும் நமக்குள்வந்து வியாதியையுண்டுபண்ணி நமது சரீரங்களைச் சூறையாடுகின்றன. வேறுசில கிருமிகள் அப்படியே வெளியினின்றும் நமக்குள்வந்து நமது சரீரங்களின் சுகத்தைவிருத்திபண்ணுகின்றன. இவ்விதமாக இந்த நமது போர்வைகளாகிய தேகங்கள் இடைவிடாமல் தங்கள் தளவாடங்களை மாற்றிக்கொண்டேயிருக்கின்றன. இத்தளவாடங்கள்வந்து கொஞ்சநேரம் தங்கிநின்று அப்பால்வேறு சரீரங்களிற்சேர்ந்து அவைகளின் பாகங்களாம்படி போய்விடுகின்றன. இவ்வாறு இடைவிடாதுதிரியும் பரஸ்பரபரிவர்த்தனமும் நடந்துகொண்டேயிருக்கின்றன.

இப்படித்தடித்த உடலாகிய அன்னமயகோசமானது ஜீவாத்துமாவாகிய மனிதன் உள்ளுறைதலுக்குத்தகுந்த வாகனமாய் நிற்கும்விதமாக அவ்வுடலைச்சுத்திசெய்ய இயலுந்தன்மை இவ்வுண்மை விஷயங்கள் மேற்றானே தாங்கிநிற்பினும் மானுடப்பிறப்பில் அளவிறந்த பெரும்பான்மையோர் இவ்வுண்மைவிஷயங்களையறியாமலும் அறிவதற்குவேண்டிய கவலையின்றியும் இருக்கின்றார்கள். லௌகீக புருஷனானவன் பதார்த்தங்களின் இயற்கைக்குணகுணங்களைக் கவனித்து நோக்காது அவைகள் நாவுக்குருசியுள்ளனவாயும் தனது மனோவிருப்பங்களுக்கு இதமானவையாயும் இருந்தாலொன்றுமே போதுமெனக்கருத்துவைத்து எப்பொழுதும அழிவின்றி நித்தியமாயிருக்கும் உண்மைமனிதனாகிய ஜீவாத்துமாவிற்குச் சுத்தமும் மேன்மையுமான உறைவிடமாவதற்கு யோக்கியமானவையா யோக்கியமற்றவையாவென்று சற்றும் யோசித்துப்பாராமல் கிட்டினபதார்த்தங்களைக்கொண்டு தேகத்தைப்போஷித்து அப்பதார்த்தங்களால் எவ்விதமாகவோ தேகம்தானே தொடுத்துக்கொள்ளும்படி விட்டுவிடுகிறான்.

ஆகாயத்தில் பறக்கும் இறகுகள், உரோமங்கள், சேறு, சிம்புகள், மணல், ஆணிகள், உச்சிட்டங்கள், பலவித கசுமாலங்கள்போன்ற குப்பைகூளங்கள் எதையும் தன்வீடுகட்டுவதற்குச் சாமான்களாக சேகரித்து எடுத்துக்கொள்ளும் பராமுகமானசிற்பியைப்போல் அவனும்போக்குவரத்தாயிருக்கும் இந்தத்துகளிதங்களிலொன்றையும்

விலக்காமலும் ஒவ்வொன்றும் அதனதன் இஷ்டம்போல் வந்து அமைந்துகொள்ளும்படி விட்டு இந்தத்துகளிதங்கள் வரும்பொழுதும் போம்பொழுதும் அவைகள்மேல் கண்காணித்தல் செய்வதில்லை. சாதாரணமான லௌகீகமனிதன் தன்தேகத்தின்விஷயத்தில் படபடப்பாய் அவசரப்பட்டு அதிக இளப்பமான சாமான்களைக்கொண்டு அஜாக்கிரதையாய் உரமில்லாமல் நோஞ்சலானகட்டிடம் கட்டுகிறவனேயன்றி வேறல்லன். இஃதுண்மையே. ஆகவே தடித்த உடலாகிய அன்னமயகோசத்தைச் சுத்திசெய்தல் அந்த உடலைச் சமைக்க வந்து சேரும்படி நம்மால் இடங்கொடுக்கப்படும் அணுக்களைக் கருத்தாய் ஆராய்ந்து தெரிந்தெடுக்குஞ் செய்கையாக அமைந்து நிற்கும். அவ்வுடலைச் சுத்திசெய்ய விரும்பும் மனிதன் அசுத்தமும் கோரமும் தாமசமும் பொருந்திய பதார்த்தங்களை நீக்கி அவனுக்குக்கிடைக்கக்கூடியவைகளில் மிகவும்சுத்தமுஞ்சத்துவமுமான பதார்த்தங்களை ஆகாரமாக உட்கொள்ளுவான். இந்தத்தேகத்தைப்புனிதமாக்காமல் செயற்கையாக வெகு துரிதமாக நடத்தக் கூடியதாயினும் இயற்கையாகவே குறைந்த பக்ஷம்ஏழு வருஷங்களுக்குள் அவன் கவலையின்றி அசட்டையாய்த்தன் வாழ்நாளைக்கழித்து வந்த காலங்களில் தன் தேகத்தில் வந்து சேர்ந்த அணுக்கள் எல்லாம் படிப்படியாய் மாறிப்போய்விடும் என்பது அவனுக்குத் தெரியும். ஆகையால் அசுத்தமான அணுக்கள் இனிமேல் தன் தேகத்தில் சேர்ப்பதில்லையென்று உறுதி செய்துகொள்கிறான். தூய்மையான கூறுகள் தேகத்தில் அதிகரித்து வரும்படி அவன் செய்துக்கொண்டு வரவும் அவனுடைய உடன்பாடின்றிவெளியிலிருந்து அந்தத்தேகத்தின் பேரில் வந்து விழக்கூடியவும் அல்லது அந்தத்தேகத்திற்குள் பிரவேசிக்கக்கூடியவுமாகிய அசுத்த அணுக்கள்எவையையும் நாசமாக்கிவிடும்படியான காவல் வீரர்கள் கூடிய ஒரு சேனையை அவன் தன் தேகத்தில் உண்டுபண்ணிக்கொள்ளுகிறான். மேலும் இதனுடன்கூடத்தன் தேகம் புனிதமாயிருக்கவேண்டுமென்று திடமான முயற்சியுடன் சங்கற்பிக்கும் சங்கற்ப சக்தியினாலும் அவன்தன் தேகத்தைப்பாதுகாத்துக்கொள்ளுகின்றான். இப்படிச்சங்கற்பிக்கும் சங்கற்பமானது காந்த சக்தியை யொத்து நடந்து அவன் தேகத்திற்குள் பிரியத்துடன் உல்லாசமாய்ப் பிரவேசிக்க இருக்கும் எல்லா அசுத்த அணுக்

களாகிய பிராணிகளாயும் அவன் அருகினின்றும் தூரமாக இடைவிடாது துரத்தி ஓட்டி அந்தத் தேகமானது சகலவித அசுத்தங்களும் நிறைந்திருக்கும் ஆகாயத்தில் உயிர் வாழ்ந்து உலாவிக்கொண்டிருக்கும்போது அந்தத்தேகத்திற்கு அசுத்த உயிரணுக்களாகிய பகைவர்களால்நேரிடக் கூடிய தொந்தரவினின்றும் அந்தத் தேகத்தைக்காப்பாற்றும்.

தி. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை.

சமாசாரக்கொத்து.

வேல்ஸ் இளவரசர் பம்பாயைவிட்டுப் புறப்படுமுன்னர் டாக்டர் பண்டார்கருக்கும் மிஸ்டர் மலயாரிக்கும் பேட்டி கொடுத்தார்கள்.

* * *

லார்ட்கர்ஸன் அவர்கள் ஆக்ராவுக்குச் சென்றிருந்தபொழுது அந்நகரை மிகவும் சிறப்பித்துப்பேசினர். அதுவே எல்லாநகர்களிலும் தமக்கும் பிரியமான நகர்என்று புகழ்ந்துபேசினராம்.

* * *

லார்ட்கர்ஸனது அரசாக்ஷி இம்மாதம் 18உ சனிக்கிழமையோடு முடிவுபெற்று அவரும் சீமைக்குப்புறப்பட்டுவிட்டார். அச்சமயம் லார்ட்மிண்டோ அவர்களும் கூடஇருந்து வழியனுப்பினார்கள்.

* * *

கிரிக்கெட் விளையாட்டில் உலகப்பிரசித்திபெற்ற பிரின்ஸ ரஞ்சிட்ஸிங்கு, இளவரசருடைய வேண்டுகோளின்படி பம்பாய்வந்து அவரைப்பேட்டிபண்ணினார்.

* * *

பம்பாயில் நடந்த பால்நடனத்தில் இளவரசர் நம்சென்னை கவர்னர் அவர்களுடைய மனைவியாராகிய லேடி ஆம்ட்ஹில்லுடன் கைகோர்த்தாடினாராம்.

* * *

இந்தூருக்குச் செல்லுங்கால் இளவரசரும் இளவரசியாரும் பம்பாயைச் சார்ந்த பாஞ்சுமஹால்ஜில்லாக்கடுத்துள்ள இன்பகரமான இயற்கைக்காட்சிகளைக்கண்டுகளித்தனராம். ஷாம்பல் ஸ்டேஷனுக்கு அடுத்துச்சென்ற

போது கொழுத்துப்பழுத்துத்தொங்கின திணைப்பயிர்களும் பச்சைநிறமான வேறு தானியப்பயிர்களும் இத்தம்பதிகளுக்கு மனோரஞ்சிதமாயிருந்தன.

* * *

இந்தூரில் ஹோல்கார் மகாராஜா இளவரசரை எதிர்சென்றழைத்தார். இவர் 16பிராயமுள்ள இளைஞர். மகாசாமர்த்தியத்துடன் இராஜ்யபரிபாலனம் பண்ணும் மகமதியமதத்தைச் சார்ந்த போபால் மகாராணியார் அவ்விடம் வந்திருந்தார்கள். 60 சிற்றரசர் வெகுஅழகான உடுப்புக்களுடன் விஜயம் செய்திருந்தது வெகு அற்புதக் காட்சியாகவேயிருந்தது.

* * *

இந்தூருக்கு இளவரசரும் இளவரசியாரும் எழுந்தருளியிருந்த காலத்தில் தாட்டியர் மகாராஜாவினுடைய யானை சிலவேடிக்கைகள் செய்ய அவைகளைக்கண்டு அவர்கள் மிகக்களித்தனராம்.

* * *

போபால் மகாராணியாருக்கு ஜி. ஸி. ஐ. ஈ. என்றபட்டமும், ஸெயிலாஞாராஜாவுக்கு கே. ஸி. ஐ. ஈ. என்றபட்டமும் இளவரசரால் அளிக்கப்பட்டன.

* * *

இம்மாதம் 18உ சனிக்கிழமைகாலை நம்கவர்னர் ஜெனரலாகிய லார்ட் மிண்டோவுக்கு பம்பாய் முனிசிபாலிட்டியார் வந்தனோபசாரப்பத்திரிகை வாசித்தார்கள்.

* * *

லார்ட்கர்ஸன் 17உ வெள்ளிக்கிழமைதினம் பைகல்லாகிளப்பில் ஒரு பெரிய பிரசங்கம் செய்தனர். அப்போது தாம் இந்தியாவின் நன்மைக்காகவே இவ்வேழுவருஷகாலமும் உழைத்துவந்திருப்பதாக உருக்கமாகப்பேசினார். இவர்பேச்சுத்திறமை இவரதுசத்துருக்களையும் மயக்குமென்பதிற் சிறிதுமையமில்லை.

* * *

16உ வியாழக்கிழமை நம் கவர்னர்ஆகிய லார்ட் ஆம்ட்ஹில் பம்பாய் போய்ச்சேர்ந்தார்கள். 22உ புதன்கிழமை சென்னை சேர்ந்தார்கள.

* * *

ஹானரபிள் மிஸ்டர் கோக்கலே அவர்கள் சீமைசென்று மான்செஸ்டர் வாசிகளுக்கும் இதர ஆங்கிலேயருக்கும் இந்தியாவின் விஷயங்களைப்பற்றி பிரசங்கமாரிபொழிந்து வருகிறார்கள். லண்டனில் 14உ செவ்வாய்க்கிழமை இம்மகானுக்கு ஒரு விருந்தளிக்கப்பட்டது. அதில் நம் நண்பர்களான ஸர் ஹென்ரிகாடன் அவர்களும் ஸர் வெட்டர்பர்ன் அவர்களும் விஜயஞ்

செய்திருந்தார்கள். இம்மகான் அடுத்தடிசம்பரில் நம் நாட்டுக்குத்திரும்பிக் காசிமாநகரில் நடக்கும் காங்கிரெஸ் மகாசபைக்கு அக்கிராசனம் வகிப்பார்கள்.

* * *

நாளது 16வ பிற்பகலில் வின்ஸர் மாளிகையில் எட்வர்ட்மகாராஜா அவர்கள் வேட்டையாடிக்கொண்டிருந்தபொழுது ஒரு முயற்குழியில் கால் மாட்டிக்கொள்ள வலக்காலில் கணேக்காலுக்குமேலே சொற்பம் காயப்பட்டது. நடந்துசெல்லச் சக்தியிருந்ததாம்.

* * *

15வ மாலை அந்நிபெஸண்டு அம்மையார் அலகபாத்தில் பேசியபோது சுதேசமுயற்சியை மிகவும் சிலாகித்தார்கள். ஜனங்களது ஒற்றுமையே இந்தியாவின் மேன்மைக்குச் காரணம் என்றும் கூறினார்கள்.

* * *

15வ புதன்கிழமை காலை டாக்காகாலேஜிலுள்ள மாணவர்களெல்லாம் ஒரே மனமுள்ளவராய் நின்றுபோனார்கள். அன்றுமாலை மாணவர்களில் சிலதுஷ்டர்கள் பள்ளிக்கூடத்தைத் தீக்கொளுத்தினர்கள். போலீஸார் உடனே வந்து தீயை அணைத்தார்கள். போலீஸார் காலேஜைக் காத்துக் கொண்டு வருகிறார்கள். மாணுக்கருடைய இக்கொடிய செய்கை மிகவும் அருவருக்கத்தக்கது. இதனால் இவர்கள் தேசத்துக்குத் தீங்கிழைக்கிறார்களே ஒழிய சிறிதும் நன்மையுண்டாகாது. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சன்றோ? பாரிஸாலில் கூர்க்காப் படையார் வந்திறங்கி யிருப்பதாய் ஜனங்கள் திகிலடைந்திருக்கிறார்கள்.

* * *

ரங்க்பூர் டிஸ்திரிக்ட் மாஜிஸ்டிரேட்டாகிய மிஸ்டர் எமர்ஸன் ஜமீந்தார்கள், வக்கீல்கள், பாரிஸ்டர்கள், பண்டிதர்கள், அடங்கிய 25 பெரிய மனுஷியர்களை ஸ்பெஷல் கான்ஸ்டேபில்களாகத் தாக்கல் செய்திருக்கிறார். அதாவது அவ்வூர் எல்லைக்குள் கலகம் நடந்தால் இவ்விருபத்தைந்து பேர்களும் உத்தரவாதம் செய்யவேண்டுமென்பதே. இவர்களுக்கு அரைக்கச்சுமுதலியவைகளை அனுப்பி அவற்றைத் தரித்துக்கொண்டு கவாத்துக்கு வரும்படி உத்தரவு செய்தாராம். ஷெ பிரபுக்களில் சிலர் இதனை வெறுத்து மறுத்துவிட்டனராம். அதற்காக அவர்களைக் குற்றம் சாட்டியிருக்கின்றனராம். ரங்க்பூர் முழுதும் கொல்லென்று இதே பிரஸ்தாபமாக இருக்கிறது. இது முற்றும் அநீதியே. பெரியோர்களைக் கௌரவமாக நடத்தினால் மட்டும் கலகங்கள் அடக்க முயல்வார்களே ஒழிய இவ்வாறு அவமானத்துக் குட்படுத்தினால் யாது பயனே.

வைத்தியம்.

குழந்தைகளின் வயிற்றுவலிக்கு.

இளந்தென்னம்பூவைச் சிறுக நறுக்கினது ஒரு மாங்காயளவைப் பிட்டாவியில் வைத்துப் பிழிந்தரசம் 2 ருத்தரணியளவைப்புகட்ட உடனேநின்றுவிடும். 6 மாதத்திற்குட்பட்ட குழந்தைகட்கு ஒரு ருத்தரணிரசம் போதுமானது.

குழந்தைகள் இருந்தாற்போலிருந்து பலதடவை விட்டுவிட்டு அழுவதாலும் முகத்தை அடிக்கடி கைகளாற்றேய்ப்பதினாலும் பின்புறம் முதுகை வளைப்பதாலும் அல்லது குனிந்துகொண்டேயிருக்க இஷ்டப்படுவதாலும் வயிற்றுநோய் கண்டிருக்கிறதெனத் தெரிந்து சிகிச்சை செய்யவேண்டியது.

இளைத்தகுழந்தைகள் தேற.

ஆலின்விழுது, ஆலின்தளிர், இளந்தென்னம்பூ வகைக்குப்பலம் 1. அதிமதுரம், தக்கோலம், மிளகு, சீரகம் வகைக்கு வராகனெடை 3 எல்லாவற்றையும் பசுப்பால்விட்டு நன்றாயரைத்து அரைப்படி பசுநெய்யிற் கரைத்து அடுப்பேற்றியெரித்து நீர்சுண்டிய பக்குவத்தில் நெய்யைவடித்து வைத்துக்கொள்க.

உட்கொள்ளும் விதம் :—வேளைக்குச்சிறிய நெய்க்கரண்டியில் ஒரு கரண்டியளவாகக் காலை மாலை ஒருமண்டலங் கொடுத்துவருக.

இந்நெய்யைச் சாப்பிட்டு வருவதால் உடம்பின் மெலிவும் சூடுங்குறைந்து சிறுகச் சிறுகத் தேகந் தேறிப் புஷ்டியாய்விடும். பத்தியமில்லை.

இலவங்காதிச்சூரணம்.

இலவங்கம், இலவங்கப்பத்திரி, இலவங்கப்பட்டை, எலம், சடாமாஞ்சில், சிறுநாவற்பூ, திப்பிலி, திப்பிலிமூலம், நன்னாறிவேர், செவ்வியம், கொத்துமல்லி, பன்றிக் கோரைக்கிழங்கு, பேரீச்சம்பழம், முந்திரிப்பழம், சாதிக்காய், சாதிபத்திரி, வெட்டிவேர், விலாமிச்சம் வேர், சந்தனக் கட்டை, கூகை நீறு, நெறிஞ்சிற்காய், சாரணை வேர், நிலப்பனைக் கிழங்கு, நிலவேம்பு, அமுக்கரா வேர், இவை சமம் வெயிலிலுலர்த்திச் சூரணித்துப் புதிய கலயத்தில் வைத்துக்கொள்ள வேண்டியது.

உட்கொள்ளும் விதம்:—வேளைக்கு அரைவெறுகடியளவு சூர்ணத்தில் அவ்வளவே ீனிச்சர்க்கரை கலந்து சாப்பிடவேண்டியது. காலை மாலை யிரு வேளையும்–12–24–36–48–என்னும் நாட்கண காய் ரோக நிதானமறிந்து சாப்பிடுக.

இச்சூரணத்தில் சர்க்கரையை அப்போதைக் கப்போது சேர்த்துப் புசிக்க வேண்டுமேயன்றிச் சூரணங்கண்டவெடைக்குச் சர்க்கரையை நிறுத் துக்கலந்து மொத்தமாய் வைத்துக்கொள்ளப் பிரயத்தனப்படக் கூடாது.

தீரும் வியாதிகள்:—உஷ்டணவாயு, அஸ்திசுரம், இருமல், கைகாலெ ரிவு, மேகவெட்டை, வெள்ளை விழுதல், பித்தம், அரோசகம், வாந்தி முத லிய அனேகரோகங்கள் குணமாகும்.

பத்தியம்:—கடின ரோகிகள் மாமிசமும் புளியையும் விலக்கிப்புசிக்க, மற்றையோர் இச்சாபபத்தியமாயிருக்க.

பிரமிலேகியம்.

நீர்ப்பிரமிச் செடிகளை வேரோடு பிடுங்கி ஓடுகிற தண்ணீரில் நன்ருய்ப் பிடிபிடியாயெடுத்துக் கழுவித் தண்ணீர் வடியும்வரை சுத்தமான தரையில் தனித்தனியே போட்டெடுத்துத் துடைத்து இடித்துப் பிழிந்தசாறும், பசு நெய்யும் வகைக்குப்படி, 1, இவ்விரண்டையும் பழக்கிய மட்பாண்டத்தில் சேர்த்து ஓர்சாதிவிரகால் மிருதுவான தீயிட்டெரித்துச் சாறெல்லாஞ் சுண்டி நெய் கொதித்துவரும்போது ஒரு வராகனெடை தங்கரேக்கைப் பொடித்தாவது அல்லது சுத்தித்த தங்கத்தைராவின பொடியையாவது போட்டுச் சற்று உருகினவுடன் பாத்திரத்தைக் கீழேயிறக்கி அல்லது நெ ருப்பையாற்றி, மிளகு, மஞ்சள், சுக்கு, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக் காய் இவற்றின் தோல்கள் ஆகிய, 6, சரக்கையும் வகைக்கு, 12, வராக னெடையாக எடுத்துச் சூரணித்த தூளைத் தூவிக்கலந்து வேறுபாத்திரத்தி லெடுத்து வைத்துக்கொள்ளவேண்டியது.

உட்கொள்ளும் அளவு:—வேளைக்குக் கொட்டைப்பாக்களவாகக் காலை மாலை குறித்த காலம் வரை சாப்பிட்டுவருக.

புருஷருடன் கூடிவாழும் ஸ்திரீகளிற் சிலர் தங்கள் தேகசுபாவத்திற் கும் நாயகர்களின் தேகசுபாவத்திற்கும் ஒவ்வாமையாலாவது, கர்ப்போஷ்ட ணத்தினுலாவது, துஷ்டகிருத்தியங்களினுலாவது, மற்றுஞ்சில காரணங்களி னுலாவது நாளாவட்டத்தில் அறமெலிந்து மிகச்சிறிய காரியமுஞ் செய்யச் சக்தியற்றவர்களாய், அற்ப ஆகாரத்தை உட்கொண்டு தாகமுந் தூக்கமுஞ் சோம்பலு மேலிட்டுத்தங்கட் தேகத்தையே சுமக்கக் கஷ்டப்படுபவர்களாய்

க் காணப்படுகிறார்கள். இத்தகையினர் இம்மருந்தை, 3, மாதம்வரை விடாது சாப்பிட்டுவரக் குணமடைவார்கள்.

மேற்கண்டபடி பலமான ரோகமொன்றுமில்லாததுபோற் காணப்பட்டுத் தேகமாத்திரம் வறட்சியடைந்து கருப்பமாத்திரமில்லாது போகிற ஸ்திரீகள், 6, மாதம்வரை இம்மருந்தைப் புசித்துவரின் உடம்புந்தேறிக் கருப்பமடைவார்கள். மருந்தைப் புசித்து வரும்போதே கருப்பமுண்டாய் விட்டால் அப்போதே மருந்தை நிறுத்திவிடலாம்.

தேகம் இளைத்துப்போன ஆண்பெண்ணிருபாலாரும் தேகம் பெருக்கும்வரையுஞ் சிலகாலஞ் சாப்பிட்டுவர உடல் தேறிப் பளபளப்பை யடையலாம்.

சிலர்க்குப் பால்யந்தொடங்கிச் சிரங்கு சொறி மேலிட்டு, மந்த புத்தியடைந்து கண்டோர் சோம்பேறி, வெறியன், என்றெண்ணும்படி அறிவு கெட்டுவிடுவதுண்டு. இவர்கள் ரோகத்தை ஆரம்பத்திற் களையாவிடின் கிரமேண இவர்கள் மூளை, அறியுஞ் சக்தியை யிழந்து ஆயுள்வரை ஒருவகைச் சிறு பைத்தியக்காரர்களாய்விடத் தடையேயில்லை. இவர்கள் ஒருவருஷம் இம்மருந்தைப் புசித்துவரின் தேகமும் மூளையும் பலப்பட்டுச் சீரடைவார்கள்.

பிர்ம சிருஷ்டியி லுண்டாகிய எண்ணிறந்த மூலிகைகட்கு அவற்றின் காரண இடுகுறியாலேயே பெயர் அமைந்திருப்பதை மூலிகைப் பிரயோகங்களிற் கைதேர்ந்த பண்டிதர்கள் நாளுமறிந்து வியப்புங் குதூகலமுமடைந்து வருகிறார்கள். அம்மூலிகைகளில் இதுவுமொன்று. ஞானத்தைக் கொடுப்பதில் இதற்கிணையான மூலிகை வேறில்லையென்பது பதினெண் சித்தர்களது முழு அபிப்பிராயம். தற்கால இந்துவைத்தியர்களிலும் பலர் பரீக்ஷித்தறிந்த துண்டு.

பத்தியம்:—சிரங்கு சொறி முதலிய ரோகங்கட்கு மருந்து புசிப்பவர்கள், கிரந்திப் பதார்த்தங்களையும், அறிவுவிர்த்தியைக் கருதினவர்கள், சுரைக்காய், ஈரவெங்காயம், எருமைப்பால் முதலியவற்றையும், கருப்பத்தைக் கருதிப் புசிப்பவர்கள், எள்ளுண்டை முதலிய கர்ப்பக்கேட்டிற் குரியவைகளையும் விலக்கவேண்டும்.

இங்ஙன்,

வீ. சா. ஐயன்பிள்ளை

இந்துவைத்தியர், பல்லடம்.

சைவபரிபாஷை.

தர்மத்தாலே தர்மி சாதிக்கப்படும். சிலவிடத்தில் காரியத்தால் காரணம் சாதிக்கப்படும். சிலவிடத்தில் காரணத்தால் காரியம் சாதிக்கப்படும். சிலவிடத்தில் வேதத்தாலே சாதிக்கப்படும் தர்மியாகிய குலாலனிடத்திலே கடத்தைச்செய்யும் கிரியையாகிய தர்மத்தைக் கொண்டு கர்த்த்ருத்துவம் சாதிக்கப்படுகின்றது.

சொல்லிவந்த அனுமானங்களில் பக்ஷதாவச்சேதகம் ஒருமித்தில்லையென்னக்கூடாது க்ஷிதியாதியாந்தன்மையே பக்ஷதாவச்சேதகம் என்று கருத்தாதலால்.

இதில் அப்பிரயோஜகமென்று சங்கைசெய்யக்கூடாது. இப்படிக்கொத்த கர்த்தா இல்லாவிடில் காரியந்தோன்றுமையே அதற்குப் பாதகமாயிருப்பதால்.

காரியஸ்வரூபமே அசித்தமென்னவுங்கூடாது.

ஸாவயவமாயிருப்பதைக்கொண்டு காரியத்துவம் சித்தமாதலால் இதில் சரீரசன்னியத்துவமுபாதியென்றுஞ் சொல்லக்கூடாது. லாகவநியாயத்தைக்கொண்டு ஜனியத்துவமே கர்த்தாவுள்ளதாந் தன்மைக்குப்பிரயோஜனமாகுமாதலால்.

உபாதி நிக்கினத்தினாலேயே அதை முன்னிட்டுவரும் வியாப்பியத்துவாசித்திதோஷமுமில்லை.

இந்த ஹேது விருத்தனென்னவுங்கூடாது சாத்தியாபாவத்தோடு வியாப்தியின்மையால்.

அநைகாந்திகனென்றுஞ் சொல்லக்கூடாது, கர்த்தாவில்லாததாக நிச்சயிக்கப்பட்ட ஆத்மாமுதலானதில் காரியமாந்தன்மையின்மையால் காரியத்தன்மையுள்ள அங்குராதியில் கர்த்தாவில்லாததாகவேதான் தோன்றியிருக்குமென்னும் சந்தேகத்தால் சந்தேகப்பட்ட அநைகாந்திகனாயிருக்கட்டுமெனவுங்கூடாது. சாத்தியபாவ சந்தேகத்தில் சந்தேகப்பட்ட அநைகாந்திகனுந் தன்மையின்மையால்.

அப்படிக்கில்லாவிடில் மலை முதலானவற்றில் அக்கினியபாவத்தின் சந்தேகத்தால் புகை முதலானவையும் சந்தேகப்பட்ட அனைகாந்திகனாகி விடுமென்னவேண்டிவருமாதலால்.

விசுவம் கர்த்தாவில்லாதது சரீரத்தாற் பிறவாமையால் என்னுமிதனாலே ஸத்பிரதி பக்ஷனுமென்றுஞ் சொல்லக்கூடாது உபாதியை நீக்குதற்குச் சொல்லிய நியாயத்தாலேயே அதற்கும் நீக்கமுண்டாகையால்.

இப்படிக்கொத்த கர்த்தாவானவர் சக்த்தர் உக்த்தியுக்தர் பிரவர்த்தரென்று அவஸ்தாபேதத்தால் மூன்றுவிதமாயிருப்பர்.

எப்பொழுது சமஸ்தகாரியமுமுபாதானத்தில் லயித்திருக்கின்றதோ அப்போது அவற்றையுண்டாக்குஞ் சக்தியொடு மாத்திரங்கூடியிருப்பதால் சக்தரெனப்படுகிறார்.

எப்பொழுது அவருடைய சக்தியானது காரியத்தையுண்டாக்க அபிமுகமாகின்றதோ அப்பொழுது உக்தியுக்தர்.

எப்போது அந்தசக்தி காரியத்தையுண்டாக்குகின்றதோ அப்போது காரியபிரவிர்த்தையான சக்தியுள்ளவராதலால் பிரவர்த்தராகின்றார்.

அப்படியே சக்தர் உக்தியுக்தர் பிரவர்த்தர் என்று சர்த்தா மூன்றுபேதமுள்ளவர் ஆனால் சக்தியின் பிரவிர்த்தி பேதத்தினாலே அவருக்கு பேதமுபகாரமுண்டாகும் என்று மிருகேந்திரத்திற்சொல்லியிருக்கின்றது.

பௌஷ்கரத்திலும்.

சக்தியின் பிரவர்த்தியால் சிவன்விந்துக்ஷோபஞ்செய்வதால் இந்தலய முதலான பேதமும் சக்தியாலுமுண்டானது. அந்த சக்திஞானக்கிரியாஸ்வருபையாய் சத்தியருமையாய் எப்பொழுதும் பிரகாசமானையாய பராபிமுகியாய் கொஞ்சமும் யாதொரு பந்தமுமில்லாததாய் சிவனுக்கு அனன்னியையாயும் அன்னியையாயும் உள்ளபடி ஈசுவரனது மூர்த்தியாயுமிருக்கும்.

அது லயாவஸ்தையையடைந்தபொழுதுஉதாசீனையாயிருக்கும் காரியமின்மையாலுதாசீன அப்போதுதான் சாம்மியாவஸ்தை. உக்தியுக்தர்களாம் கர்த்தாக்களிடத்தில் ஞானக்கிரியைகள் சமமாயிருப்பதாமென்றறிக. இதைச்செய்கிறேனென்னும் வியாபாசத்தில் இவ்விரண்டு சக்திகளுக்கும் சாம்மியமாகும்.

அதிகாரத்தில் காரியங்கள் அதிகரித்திருக்கின்றமையால் கிரியையதிகையாகும் என்று சொல்லியிருக்கின்றது.

சங்கை. சிவனிடத்தில் சம்வாய சம்பதத்தாலொரு சக்தியுண்டென்பதற்கென்ன பிரமாணம். விசுவம் காரணத்தாலுண்டானது காரியமாதலாலென்னுமநுமானம் பிரமாணமென்னில் ஞானமிச்சை முதலானவை காரணமாகக்கூடியிருக்க வேறுசக்திவேண்டுவதில்லையே யென்னில்.

உத்தரம் அந்த ஞானமிச்சை முதலானவை சக்தியாகையால் குற்றமில்லை.

ஆனாலந்த ஞானேச்சைகளின் பேதத்தால் சக்தியும் பலவிதமாகும். அப்பொழுது சக்தி ஒன்று என்னும் சிந்தாந்தமடிபட்டுப்போகுமென்னில்.

ஞானேச்சை முதலானவற்றிற்கும் ஸ்வரூபத்தால் பேதமின்மையால் ஒன்றாகவேயிருக்கும் சக்திக்கெப்பொழுது காரியங்களுக்கனுகூலமான அதிர்ஷ்டாதியை பாரமாசிக்குஞ் சமயமோ அப்பொழுது ஞானமாகை.

எப்பொழுது இப்படியிருக்கட்டுமென்னுமாகாரமோ அப்பொழுது இச்சையாக. எப்பொழுதுஅந்தந்தக்காரியங்களையுண்டாக்குஞ் சமயமோ அப்போது கிரியையாக என்று ஞான முதலான பேதங்களுக்கு நியாயமாயிருப்பதாலென்றறிக.

இப்படியே யொருவராகவேயிருக்கு மிந்தக்கர்த்தா ஒன்பது பேதமாகிறார்.

இவ்விடத்து சிவம், சத்தி, நாதம், விந்து இந்நான்கும் நிஷ்பேதங்கள்.

சதாசிவர் ஒருவர் சகளநிஷ்களர் மகேசுவரர் ருத்திரர், விஷ்ணு, பிர்ம்மா இந்நால்வரும் சகளரென்றறிக.

அதில் இரண்டு சத்திபேதம் மற்றேழுஞ் சிவபேதங்களாகும். இப்படியொன்ருகவேயிருக்கும் அவருடைய சக்தி, விந்து, சத்தி மனேன்மணி, மகேசுவரி, உமை, லட்சுமி, வாணி என்றேழுபேதமாகும்.

சங்கை. விந்துவின் அவஸ்தாபேதத்தால்கர்த்தாவான சிவனுக்கு பேதஞ்சொல்லப்பட்டது அதுசரியல்ல அசேதனமானவிந்து ஸ்வயமே பிரவிர்த்திகூடாமையால். ஆனலீசுவரனே அதின் பிரவர்த்தியை செய்விக்கிருரென்னில் அப்பொழுது அவர்விகாரியாவாரென்னில்.

உத்தரம். நினைப்பினலும் செய்கையாலும்கர்த்தாவாந்தன்மையிருவகைத்து அதில் செய்கையால் கர்த்தாவாந்தன்மை குயவன் முதலாயினேர்க்கு.

சங்கற்பமாகிய நினைப்பும் மனேவியாபாரம் சன்னிதி என்றிரண்டுவிதம். அதில் மனேவியாபாரத்தால் கர்த்தாவாந்தன்மை பிர்ம்மாதிகளுக்கு சிவனுக்கு சன்னதி யாத்திரத்தாலாகும் விகாரஹேதுவான வெளிக்கருவியையுந்தேடுந்தன்மை அவருக்கில்லை அவர் மலராய்க்கரண முதலான வுபாதியில்லாதவராதலால்.

உலகத்திலுபாதியுள்ளவருக்கே விகாரங்காணப்பட்டிருக்கின்றது. ஆகையால் சிவன் கர்த்தாவானபோதிலும் விகாரியல்லவென்பதற்கு விரோதமில்லை.

ஆனலவருக்கு தேகாதியுபாதியில்லாதபக்ஷத்தில் கர்த்தாவாந்தன்மையுமில்லை. தேகாதியுபாதியுள்ள குயவன் முதலானவருக்கே கர்த்தாவாந்தன்மை கண்டிருப்பதாமென்னில் அப்படியல்ல தனது தேகத்தை பிரித்தல் முதலான விஷயத்தில் உபாதியில்லாமலிருக்கவுங் கர்த்தாவாந்தன்மை காணப்பட்டிருக்கின்றது அங்கும் வேருெரு உபாதி யொப்புக்கொண்டால் முடிவின்மையாகும்.

ஆகையால் முதல் சிருஷ்டியில் யாதொரு உபாதியுமின்றி சகல சத்திகளையும் பிரவர்த்திப்பிக்கின்ற சிவனே கர்த்தாவென்றுகொள்ளவேண்டும்.

மேலுமவர்பஞ்ச கிருத்தியங்களுஞ் செய்யுமிடத்து சூரியன், கமலம், கருமெய்தல் வெண்ணெய்சேறு இவற்றை மலரவும் குவியவும் உருகவும் இறுகவும் செய்வதுபோல சன்னிதி மாத்திரத்தினாலே கர்த்தாவாவார்.

அப்படியே பௌஷ்கராகமத்தில் வசனமிருக்கின்றது.

சங்கை. அவருக்கு பஞ்சகிருத்திய உபயோகிகளான பஞ்சமந்திரங்களே சரீரமாகுமென்று சிவன் மந்திர சரீரராகக் கேள்வியிருக்க எப்படி அசரீரியென்னலாமென்னில் உண்மை.

உத்தரம். இவ்விடத்து சாஸ்திரத்தில் மனனம் திபானம் அதாவது நினைப்பு காத்தல் இவையுண்டாயிருப்பதால் சத்திக்கை மந்தர சத்தம் சொல்லுகின்றமையால் அவரது தேகம் சத்திமயம் ஆனால் சத்திமயமென்றது சத்தியினாலுண்டானதுமல்ல சத்தியின் பரிணாமமுமல்ல. அப்படியாகில் அவர் நிர்விகாரி நித்தியர் என்னுமாகமங்களுக்கு விரோதமாகும்.

ஆகையால் காரியங்களின் பேதத்தால் வேறுபட்டிருக்குஞ் [illegible]நிக்கே வுபசாரமாக சிரசு முதலான தன்மையைக்கற்பித்து சரீரமாக[illegible] கொள்ளப்படும்.

பின்னுமந்தசத்தி அவரை விடவேறாகாமையால் அவருக்குச் சரீரமுண்மையல்ல.

அப்படியே பௌஷ்கரத்தில் பஞ்சமந்திரங்களே சரீரமென்பதற்குப் பிரமாணம்.

சகல சகத்தையுமாளவல்ல குணமான ஈசானமந்திரம் தலைக்கொப்பாகவுயர்ந்திருப்பதால் ஈசானம் சிரசேயல்லது உள்ளபடிசரீர அவயவமல்ல.

அந்தந்த ஆத்மாக்களின் தேகம் பூவென்றும் அதில் உஷதி சம்பண்ணுகிறவன் புருஷன் என்றும் அவனைப் பிரகாசிப்பித்துக் காக்கின்றமையால் தத்புருஷவக்திரன்.